இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி


Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 115 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 18 – திங்கள்கிழமை 04 டிசம்பர் 2023 – மதுரை 64 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 115 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 18 - Monday 04 December 2023 - Madurai 64 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (12)

# பூக்கள் நூறு பூக்கட்டுமே!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இருபதாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களின் வரிசையில் ரஷ்ய நாட்டு லெனினைப் போலவே, சீன நாட்டு மாசேதுங்கும் சிறப்பான இடம் பெறுகிறார். அவர் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து - சீன நாட்டின் மாற்றத்திற்கு ஆற்றிய அருந் தொண்டினை அந்த நாட்டின் பின்னணியோடு சுருக்கமாக வேனும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவின் காரணமாகவே இந்தக் கடிதம்.

உலகிலேயே மிகப்பெரிய நாடு சீனா. உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவர் சீன நாட்டைச் சேர்ந்தவர். பழமை வாய்ந்த நாகரிகம் சீனாவிற்குச் சொந்தமானது. சீனாவின் வரலாறு இந்தியாவைப் போலவே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டது.

இந்தியாவில் அசோக மன்னனின் ஆட்சி தோன்றுவதற்கு பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு “சின்” வம்சம் சீனாவில் ஆட்சிக்கு வந்தது. இந்த “சின்” என்பதிலிருந்துதான் சீனா என்ற பெயரே உருவானது என்பர். அதற்கடுத்து வந்த “ஹான்” வம்சத்தினர் நானூறு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அப்போதுதான் புத்த மதம் சீனாவிற்கு வந்தது. மர எழுத்து கட்டைகளைக் கொண்டு அச்சுக்கலை முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. “ஹான்” வம்ச காலத்தில்தான் அரசாங்கப் பணிகளுக்கு தேர்வு முறையில் தேர்ந்தெடுப்பது அறிமுகப்படுத்தப்பட்டது. “ஹான்” வம்ச வீழ்ச்சிக்குப் பிறகு மூன்று இராஜ்ஜியங்களாகப் பிளவுபட்ட சீனா ஏழாம் நூற்றாண்டில் “டாங்” வம்சத்தின் ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்டது. இது சீனாவின் பொற்காலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டிலேயே உலகிலேயே மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை சீனா எட்டியிருந்தது.

சீனாவின் பண்பாட்டுடனும், வரலாற்றுடனும் இணைந்து பிணைந்து வளர்ந்த மாமனிதர் மாசேதுங். அவர் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் 1893, டிசம்பர் 26ஆம் நாள் ஷாவோஷான் என்ற கிராமத்தில் பிறந்தார். ஏழு வயதிலேயே மாசேதுங் வயலில் வேலை செய்யத் தொடங்கினார். எட்டாவது வயதில் படிக்கத் தொடங்கி, பதிமூன்றாவது வயதில் பள்ளியை விட்டு விலகி மீண்டும் விவசாயத்திற்கே திரும்பினார். 1840ல் நடந்த “அபின் யுத்தம்”, 1850 முதல் 1864 வரை நடைபெற்ற கலகங்கள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் மாவோ கற்றறிந்தார். விவசாயப் பெருங்குடி மக்கள் லட்சோப லட்சம் பேர் இந்த கலகங்களில் எல்லாம் பங்கேற்றது மாவோவின் ஆர்வத்தைத் தூண்டியது. பதினேழாவது வயதில் ஒரு மத்தியதரப் பள்ளியில் சேர்ந்தார். அப்போது டார்வின், ஜேம்ஸ் மில், ரூசோ ஆகியோரது நூல்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. ஒரு சக மாணவரிடமிருந்து கிடைத்த “உலகத்து வீரர்களும் மேதைகளும்” என்ற நூல் அவரைப் பெரிதும் ஆட்கொண்டதால், மாவோ அந்த நூலிலிருந்து வாஷிங்டன், நெப்போலியன், பீட்டர் தி கிரேட், மகாராணி கேத்தரைன், வெலிங்டன், கிளாட்ஸ்டன், ரூசோ, மான்டெஸ்க்யூ, ஆப்ரகாம் லிங்கன் ஆகியோரின் வாழ்க்கை பற்றிய விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டார்.

1911ஆம் ஆண்டு டாக்டர் சன்யாட்சென் தலைமையில் மன்னர் ஆட்சியை எதிர்த்து ஜனநாயகப் புரட்சி நடைபெற்று, மன்னராட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. அப்போது எழுபத்திரண்டு புரட்சி வீரர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி மக்களிடையே

**கலைஞர் கடிதம்**

உணர்ச்சிப் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஒருநாள் மாசேதுங் படித்து வந்த பள்ளியில், ஒரு புரட்சியாளர், மாணவர் கூட்டம் ஒன்றை நடத்தி உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் உரையாற்றினார். மன்னராட்சியைத் தகர்த்து, குடியரசு அமைக்கப்பட வேண்டுமென அறைகூவல் விடுத்தார். இந்த உணர்ச்சியூட்டும் உரைதான் மாசேதுங் புரட்சிப் படையில் சேருவதற்கு காரணமாயிற்று.



மாசேதுங்

சரித்திரம், பூகோளம், தத்துவம், இலக்கியம் ஆகியவற்றை மாவோ மிகவும் விரும்பிப்படித்தார். சார்லஸ் டார்வினின் “உயிர்களின் தோற்றம்”, தாமஸ் ஹக்ஸ்லியின் “பரிணாம வாதமும் அறநெறிகளும்”, ஜே.எஸ்.மில்லின் “தர்க்க சாஸ்திர முறை”, ஹெர்பர்ட் ஸ்பென்சரின் “சமூக இயல் ஆய்வு”, மான்டெஸ்க்யூவின் “சட்டத்தின் சாரம்” ஆகிய நூல்களையும், ரூசோ எழுதிய நூல்கள், கிரேக்க, ரோம இதிகாசங்கள் ஆகிய பலதரப்பட்ட நூல்களையும் மாவோ கவனத்துடன் பயின்றார். சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பிரபலமான நூல் எதையும் அவர் படிக்காது விடவில்லை.

மாணவர் சங்கம் ஒன்றை அமைத்து, அமைப்பு ரீதியான இயக்கத்தில் உள்ள தனது அக்கறையையும், ஆற்றலையும் மாவோ வெளிப்படுத்தினார். 1918ல் மேற்படிப்புக்கு பீகிங் புறப்பட்டுச் சென்றார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### மாவட்ட ஆட்சியர்களிடம்

# மழை நிலவரம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்த அறிவுறுத்தல்!

**சென்னை, டிச.4-**

**வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனைத் தொடர்ந்து தென்கிழக்கு வங்கக் கடலில் மிக்ஜாம் புயல் நேற்று உருவாகியது. இப்புயல் நாளை கரையைக் கடக்க இருக்கிறது. இதனால் வடதமிழகத்தில் இன்றும், நாளையும் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

**இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் தொலைபேசியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தினார்.**

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. வங்கக் கடலில் புயல் உருவாகி உள்ள நிலையில் தமிழ்நாட்டில் இன்றும் (டிச. 4) மற்றும் நாளையும் (டிச. 5) மிக கன மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் வரும் 5ம் தேதி வரை ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக புயல் எச்சரிக்கை எதிரொலியாக 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. புயல் முன்னெச்சரிக்கை தொடர்பாக நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள், 12 மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர்கள் செய்யவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார்.

முன்னதாக அமைச்சர்கள், தி.மு.க.வை சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட தி.மு.க. அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகள் தத்தமது பகுதிகளில் இருந்து மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை செய்யுமாறு அறிக்கை ஒன்றை முதல்வர் அவர்கள் வெளியிட்டிருந்தார்.

**களப் பணியில் அமைச்சர்கள்**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலை அடுத்து மழைபெய்யும் இடங்களில் அமைச்சர்கள் களத்தில் இறங்கி மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தண்ணீர் வடிய உடனடி நடவடிக்கை மேற்கொண்டனர். ஆங்காங்கே மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் மழை நிலவரம் தொடர்பாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக நேற்று (3.12.2023) காலை கேட்டறிந்தார்.

மேலும், மழையால் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

---

### உருவானது ‘மிக்ஜாம்’ புயல்:

# நாளை கரையைக் கடக்கும்!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, டிச.4-*

வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுந்த தாழ்வு மண்டலம் மிக்ஜாம் புயலாக மாறியது என்றும், சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலைகொண்டுள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. துறைமுகங்களில் 3ம் எண் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று மிக்ஜாம் புயலாக வலுப்பெற்றது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலைகொண்டுள்ளது. வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற்று வட தமிழகத்தை நோக்கி புயல் நகரும். நாளை (5ம் தேதி) முற்பகலில் நெல்லூர் மசூலிப்பட்டினம் இடையே புயலாக கரையை கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் காரணமாக சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

மேலும் நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து சென்னையில் அமைச்சர், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் தயார் நிலையில் இருப்பதாக அரசு சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், புயல் எச்சரிக்கை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியை தொடர்ந்து கண்காணிப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்படும் உபரி நீர் அளவு 500 கன அடி ஆக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த இரு நாட்களாக 3 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்ட நிலையில் 1, 500 கனஅடியாக குறைந்துள்ளது. உபரி நீர் வெளியேற்றம் காரணமாக அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு விடப்பட்டுள்ளது.

இதனால் சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் இன்றும், நாளையும் மிக கன மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, பொதுமக்கள் ஒருசில நாட்களுக்கு தேவையான உணவு, நீர் மற்றும் மருந்துகளை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று (4ம் தேதி) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக இன்று கன மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ள நிலையில், மாணவர்களின் நலன் கருதி இன்று (4ம் தேதி) சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்துள்ளனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 04-12-2023

# அமுக்கப்பட்ட அமலாக்கத்துறை

**வருமான வரித்துறை -**

**அமலாக்கத்துறை -**

**சி.பி.ஐ. -** இது போன்ற விசாரணை அமைப்புகளை வைத்துக் கொண்டு பா.ஜ.க. நடத்தி வரும் அரசியல் விளையாட்டு இந்தியா முழுமைக்கும் நாறிக் கொண்டு தான் இருக்கிறது. தங்களது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க மட்டுமே இந்த புலனாய்வு அமைப்புகளை பயன்படுத்தி வருகிறது பா.ஜ.க. இதற்குப் பயந்து பா.ஜ.க.வின் முதுகுக்குப் பின்னால் பதுங்குபவர்கள், புனிதர்களாக ஆக்கப்படுவார்கள். அவர்கள் மீதான வழக்குகள் புறந்தள்ளப்படும் என்பதற்கும் எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

**‘நீங்கள் ஏன் பா.ஜ.க.வில் சேரக் கூடாது என்று செந்தில்பாலாஜியை அமலாக்கத்துறை அதிகாரிகள் மிரட்டினார்கள்’ என்று நீதிமன்றத்திலேயே மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் வாதிட்டதை இந்த நாடு பார்த்ததே!**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு அப்பாவு அவர்கள் அளித்துள்ள பேட்டியில், “சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற புலனாய்வு அமைப்புகளின் இடைத்தரகர்கள் என்னை மிரட்டினார்கள். ஊரை விட்டு போகச் சொன்னார்கள். செல்போன் எண்ணை மாற்றச் சொன்னார்கள். 3 மாதமாக இடைத்தரகர்கள் மூலமாக பலர் என்னிடம் பேசினார்கள்” என்று வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார்கள்.**

இப்படி அரசியல் நோக்கங்களுக்காக ஏவப்படும் அமைப்புகளில் இருப்பவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? அவர்களும் உள்நோக்கங்களுடன் தான் நடந்து கொள்வார்கள். ‘எஜமானர்கள்’ போலவே நடந்து கொள்வார்கள். இதுவும் வெளிச்சத்துக்கு வந்த உண்மை தான்.

**கடந்த ஆகஸ்ட் மாதம் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கை வெளியானது. அதில் என்ன சொல்லி இருந்தார்கள் என்றால்... ஒன்றிய அமைச்சகங்களிலேயே உள்துறை அமைச்சக அதிகாரிகள் அலுவலர்களுக்கு எதிராகத் தான் கடந்த ஆண்டில் அதிகமான ஊழல் புகார்கள் பதிவானதாக சி.வி.சி. அறிக்கை சொல்லி இருக்கிறது. ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு எதிராக கடந்த ஆண்டு மட்டும் 1 லட்சத்து 15 ஆயிரத்து 203 புகார்கள் பதிவாகி இருக்கிறது. இதில் உள்துறை அதிகாரிகள் மீது மட்டும் 46 ஆயிரத்து 643 புகார்கள் பதிவாகி உள்ளது. இது தான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிலைமை ஆகும். இந்த துறைக்கு பொறுப்பு வகிப்பவர் மாண்புமிகு அமித்ஷா.**

கடந்த நவம்பர் மாதம் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் அமலாக்கத் துறை அதிகாரிகள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டார்கள். இராஜஸ்தானில் ஏலச்சீட்டு நடத்தி பல கோடி ரூபாய் மோசடி செய்ததாக நிதி நிறுவனம் ஒன்றின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் கோடிக்கணக்கான ரூபாய் சட்டவிரோதமாக பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறையும் வழக்கு பதிவு செய்துள்ளது. குற்றவாளிகளை கைது செய்யாமல் இருக்க அமலாக்கத்துறை அதிகாரிகள் 2 பேர் 17 லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளனர். இது குறித்து இராஜஸ்தான் மாநில லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் அளிக்கப்பட்டது. இந்நிலையில், ஏலச்சீட்டு நிறுவன அதிபரிடம் 15 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய போது அமலாக்கத்துறை அதிகாரிகள் கிஷோர் மீனா மற்றும் பாபுலால் மீனா ஆகியோரை லஞ்ச ஒழிப்புத்துறையினர் கைது செய்தனர். அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. இதுதான் அமலாக்கத்துறையின் இலட்சணம் ஆகும்.

இதோ திண்டுக்கல்லில் அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரியை தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள்.

ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை மதுரை அலுவலகத்தில் அதிகாரியாக பணிபுரிந்து வரும் அங்கிட் திவாரி, கடந்த அக்டோபர் 29-ஆம் தேதி திண்டுக்கல்லை சேர்ந்த மருத்துவர் ஒருவரை தொடர்புகொண்டு, அவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டு முடிந்து போன வழக்கை சுட்டிக்காட்டி, அந்த வழக்கில் அமலாக்கத்துறை விசாரணை நடத்த வேண்டும் என பிரதமர் அலுவலகத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாகவும், மறுநாளே மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்துக்கு விசாரணைக்கு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார். வழக்கு விசாரணையில் இருந்து விடுவிக்க 3 கோடி ரூபாய் அவர் லஞ்சமாக கேட்டுள்ளார்.

பின்னர் தனது உயர் அதிகாரிகளுடன் பேசுவதாக தெரிவித்துவிட்டு இறுதியாக 51 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்றும் பேரம் பேசியுள்ளார். முதற்கட்டதாக 20 லட்சம் ரூபாயை வாங்கிய அங்கித் திவாரி, 2வது கட்டமாக 31 லட்சம் ரூபாய் கேட்டு மிரட்டியுள்ளார். இது தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி நாகராஜனிடம் மருத்துவர் புகார் அளித்ததார். இதன் பேரில், லஞ்ச ஒழிப்புத்துறை அறிவுறுத்தலின்படி ரசாயனம் தடவிய 20 லட்சம் ரூபாய் நோட்டுகளை திண்டுக்கல் மதுரை சாலையில் உள்ள தோமையார்புரம் அருகே திவாரியிடம் மருத்துவர் கொடுத்த போது, லஞ்ச ஒழிப்புத்துறையினர் அவரை துரத்தி சென்று பிடித்தனர். சிறையில் அடைக்கப்பட்டு விட்டார்.

**திண்டுக்கல் அரசு மருத்துவர் மற்றும் அவர் மனைவி மீது வழக்குப்பதிவு செய்து அவர்களது சேவையை களங்கப்படுத்தி விடுவதாக மிரட்டியதாகவும், நடவடிக்கை எடுக்காமல் இருக்க உயரதிகாரிகளுக்கும் பணம் வழங்க வேண்டும் என்று மிரட்டி லஞ்சம் பெற்றதாகவும் லஞ்ச ஒழிப்புத் துறை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பலரையும் மிரட்டி, அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி லஞ்சம் பெற்றதாகவும் முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் அதிகாரிகளுக்கும் பங்குதர வேண்டி உள்ளதால் பேசியபடி முழுத்தொகையான 51 லட்சத்தையும் தரவேண்டும் என்றும், இல்லையென்றால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் தொடர்ந்து வாட்ஸ்அப் மூலமும், குறுஞ்செய்திகள் மூலமும் மிரட்டியுள்ளார்.**

இந்த குற்ற நிகழ்வில் மதுரை மற்றும் சென்னை அமலாக்கத்துறை அலுவலகங்களில் உள்ள பல அதிகாரிகளுக்கும், இதில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அங்கித் திவாரியின் வீடு மற்றும் மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகம் ஆகியவற்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இச்சோதனையின்போது இவருக்கு தொடர்புடைய பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவித்துள்ளது.

**பிரதமர் அலுவலகத்தின் பெயரை அமலாக்கத்துறை அதிகாரி பயன்படுத்தி இருக்கிறார். ஹவாலா மூலமாக பணத்தை வெளிநாடுகளில் தர முடியுமா என்றும் கேட்டுள்ளார். இதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் புலனாய்வு அமைப்பு செயல்படும் லட்சணம் ஆகும்.**

## மிக்ஜம் புயல் எதிரொலி:
# 5 துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!

சென்னை, டிச.4-

தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவி வந்த தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது புயலாக வலுப் பெற்றுள்ளது. இந்த புயலுக்கு ‘மிக்ஜம்’ என பெயரிடப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலை கொண்டுள்ளது. இது நெல்லூர் மசூலிப்பட்டினம் இடையே 5ம் தேதி மாலை கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

புயல் காரணமாக பலத்த காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடல் பகுதிக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை காசிமேடு, திருவொற்றியூர், எண்ணூர் கடற்கரைப் பகுதியில் கடல் சீற்றமாக காணப்படுகிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (02.12.2023) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்து பெற்றார்.

## கனமழை காரணமாக பாதிப்பிலிருந்து
# பொதுமக்களை பாதுகாக்க உரிய ஏற்பாடு!
## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, டிச.4-

வங்கக் கடல் பகுதியில் உருவாகும் புயல் சின்னம் மற்றும் கனமழை முதல் அதி கனமழை எச்சரிக்கை - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமசந்திரன் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் உள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே சுமார் 510 கி.மீ.தொலைவிலும், நெல்லூருக்கு தென்கிழக்கே சுமார் 630 கி.மீ. தொலைவிலும், மசூலிப்பட்டினத்திற்கு (ஆந்திரா) தெற்கு தென்கிழக்கே சுமார் 710 கி.மீ. தொலைவிலும் நிலை கொண்டுள்ளது என்றும்,

இது மேலும், மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்திற்குள் தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் புயலாக மாறக்கூடும் என்றும்,

பின்னர், இது வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர பிரதேச மற்றும் அதனை ஒட்டியுள்ள வட தமிழககடலோர பகுதியினை 04.12.2023 அன்று முற்பகல் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும்,

அதன் பிறகு வடக்கு திசையில் நகர்ந்து 05.12.2023 அன்று முற்பகல் தெற்கு ஆந்திர பிரதேசத்தின் கடற்கரையை நெல்லூர் மற்றும் மசூலிப்பட்டினத்திற்கும் இடையே புயலாக கரையை கடக்கக்கூடும் என எதிர்பார்ககப்படுகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர்.



வங்கக் கடல் பகுதியில் புயல் சின்னம் உருவாக உள்ளதால், கனமழை முதல் அதி கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் நேற்று (02.12.2023) மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ.ராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 200 வீரர்கள் கொண்ட 8 குழுக்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள விரைந்துள்ளனர்.

புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்கள் TNSMART செயலி மூலமாகவும், Twitter, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 162 நிவாரண மையங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளது. 1 நிவாரண முகாமில் 299 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 504 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு அமைச்சர் கே.கே.எஸ். ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (12)

# பூக்கள் நூறு பூக்கட்டுமே!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

மாவோ மீது அன்பு வைத்திருந்த பேராசிரியர் ஒருவரின் பரிந்துரையில் பீகிங் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் உதவியாளராக மாசேதுங் நியமனம் பெற்றார். மாவோ 1919ஆம் ஆண்டு இறுதியில் ஹுனானுக்குத் திரும்பினார். 1921ஆம் ஆண்டு தொடக்கத்தில் சாங்ஷாவில் ஒரு கம்யூனிஸ்ட் அமைப்புக் கிளையை அமைக்க மாவோ உதவினார். பிறகு ஹுனான் மாகாணக் கட்சியின் செயலாளரானார்.

விவசாயிகளின் புரட்சிகரத் தன்மையின் காரணமாக, அந்த வர்க்கத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சி பிரதான கவனம் செலுத்த வேண்டும் என மாசேதுங் வலியுறுத்தினார். ரஷ்யப் புரட்சியின் போது, லெனின், தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து மிகப் பெரும் மாற்றத்திற்கு வழி வகுத்தார். ஆனால், மாசேதுங் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டிப் போராட வேண்டும் என்று விரும்பினார். 1927-ல் அகில சீன விவசாயச் சங்கத்திற்கு தலைவரானார்.

கோமின்டாங் வலதுசாரி தலைவர்கள் இராணுவ நடவடிக்கையின் மூலம் கம்யூனிஸ்ட் தொழிலாளர் இயக்கச் செல்வாக்கை அழிப்பது என்று முடிவு செய்தனர். அதன் தொடர்ச்சியாக, 1927, மார்ச் மாதத்தில் சியாங்கே ஷேக் இராணுவத்தினர், ஷாங்ஹாய் மாநகரத்துக்குள் நுழைந்து சீனர்களின் குடியிருப்புப் பகுதிகளை பிடித்துக் கொண்டனர். சியாங்கே ஷேக் ஒரு போட்டி அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். இதற்கு உலக ஏகாதிபத்தியங்கள் அங்கீகாரம் அளித்தன. தனது சொந்த அரசையே உதறித்தள்ளி, போட்டி அரசாங்கம் அமைத்த சியாங்கே ஷேக், ஷாங்ஹாய் மாநகரில் கம்யூனிஸ்ட் மீதும் தொழிற்சங்கங்கள் மீதும் போர் தொடுத்தார். இவர்கள் அனைவரையும் வேட்டையாடி, நூற்றுக் கணக்கானவர்களைச் சுட்டுத் தள்ளி, ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து மாபெரும் துரோகத்தை அரங்கேற்றினார். சியாங்கே ஷேக் கட்டுப்பாட்டில் வந்த கோமின்டாங் அரசாங்கம், சன்யாட்சன் வகுத்தளித்த கொள்கைகளான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகியவற்றிற்குத் துரோகம் செய்து, ஏகாதிபத்திய வாதிகளுடன் கைகோத்துக் கொண்டது.

சீனச் செம்படையும், கம்யூனிஸ்ட் கட்சியும் தீரமிக்கப் போர் நடத்தியும்கூட, சியாங்கே ஷேக்கின் "சுற்றி வளைத்துத் தாக்குவது" என்ற உத்தியை எதிர்கொள்ள முடியவில்லை. முழுமையாக அழிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்காக 1934, அக்டோபரில் முற்றுகையிடப்பட்ட தளங்களிலிருந்து முற்றுகையை உடைத்துக் கொண்டு, செம்படையும், கம்யூனிஸ்ட்டுகளும் வெளியேறி வரலாறு கண்டிராத நீண்ட நெடும் பயணத்தைத் தொடங்கினர்.

மாசேதுங், சூஎன்லாய் தலைமையில் செம்படையின் பிரதான பிரிவுகள் 85,000 வீரர்கள், கம்யூனிஸ்ட் கட்சியி னர் 15,000 பேர் சியாங்ஸி மாகாண முற்றுகையிலிருந்து துணிந்து வெளியேறி, வடமேற்கே 3000 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்ஜெசுவான் பிரதேசத்தை நோக்கிப் பகலிலும், அதிகமாக இரவு நேரத்திலும் மழை, இடி, மின்னல், வெயில் என்று பாராமல் ஓராண்டு நடைபயணத்தை மேற்கொண்டனர். ஆண்டு முழுவதும் நாளொன்றுக்கு நடந்த தூரம் 26 மைல்கள் ஆகும். நிரந்தரமாகப் பனி மூடியிருந்த 5 மலைத் தொடர்கள் உள்ளிட்ட 18 மலைத் தொடர்களையும், 24 ஆறுகளையும், 62 மாநகரங்கள் மற்றும் நகரங்களையும் அவர்கள் கடந்து சென்றனர். இது உலக வரலாற்றில் ஈடு இணையில்லா நிகழ்ச்சி! வேறுசில பிரதேசங்களிலிருந்தும் செம்படையினர் வடக்கு ஷான்க்சி வந்து சேர்ந்தனர்.

முதல் மாதத்திலேயே 25 ஆயிரம் பேர் மரணமடைந்தனர். பதினோரு மாகாணங்கள் வழியாக சுமார் 10 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் காடு, மலை, வனாந்திரப் பிரதேசங்களைக் கடந்து, வரும்வழியில் பலர் மாண்டும், புதிதாகப் பலர் சேர்ந்தும், கிராமப்புறப் பிரச்சாரத்தில் இருபது கோடி மக்களைச் சந்தித்தும், இறுதியில் வெற்றிகரமாக வந்து சேர்ந்து, உலக வரலாற்றில் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் இணையற்ற வீரகாவியம் படைத்தனர்.

நெடும்பயணத்திற்காகவே மாவோ தன்னுடைய கைப்பெட்டியைத் தூக்கியெறிந்து விட்டார். நெடும்பயணத்தில் புகைப்பிடிப்பதென்பது ஒரு ஆடம்பரம் என்று கருதப்பட்டதால் மாவோ தான் வழக்கமாக புகைப்பிடிக்கும் சிகரெட்டுகளை துறந்தார். அவர் பயணம் தொடங்கியபோது அவர் மலேரியாவி லிருந்து ஓரளவு குணமாகிக் கொண்டிருந்தார். அவருடைய வீரர்களில் ஒருவர் அவர் நலிந்து, மெலிந்து போயிருந்தார் என்று விவரித்தார். மாவோ ஓய்வுக்காக ஒரு தூக்குப் படுக்கையில் எடுத்துச் செல்லப்பட்ட நேரம் தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் தனது சக தோழர்களோடு நடந்தே சென்றார். பயணம் சென்றவர்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் இருந்தனர். அவர்கள் கட்சி மற்றும் அரசின் உயர்ந்த பதவிகளில் இருந்தோரின் மனைவியர் ஆவர். பிற பெண்களும், மாவோவின் இரு குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளும் விவசாயக் குடும்பங் களிடையே விட்டுச் செல்லப்பட்டனர். அவர்களைப் பிறகு கண்டு பிடிக்கவே முடியவில்லை. பயணம் தொடங்கிய போது, மாவோவின் துணைவியார் ஹோ ஜீ சென் கருவுற்றுச் சில மாதங்கள் ஆகியிருந்தன. பயணத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே அவர் குண்டு தாக்குதலில் காயமடைந்தார். அவருடைய உடலில் 25 குண்டுத் துகள்கள் இருந்தன.

லி ஃபு சன்னின் மனைவி சாய் சேங், சௌ என் லாயின் மனைவி டெங் யிங் காவோ ஆகியோர் நெடும் பயணத்தில் இருந்த புகழ் பெற்ற பெண்மணிகள் ஆவர். இருவரும் காச நோயால் துன்புற்றனர்.

படை வீரர்களில் ஒருவர் இந்த நெடும்பயண வழியைப் பற்றி பின்வருமாறு நினைவு கூர்கிறார் :

"நாங்கள் குறுகிய, அபாயமிக்க பாதைகள் வழியாக, குறுகிய கணவாய்கள் வழியாக, குறுகிய பாலங்கள் வழியாகக் கடந்து செல்லும்போது அல்லது பனி சில்லிடும் நீரோட்டங்களை நீந்திக் கடக்க வேண்டியிருந்த போது, மிக மோசமான சோதனைகளை எதிர்கொண்டோம். அதுபோன்ற சமயங்களில் எங்களது முன்னோடிப் படை வேகம் குன்றும்; பின்புலப் படையோ ஓரடி முன்வைத்தால் பத்தடி நின்று கொண்டேயிருக்கும். எங்களால் முன்னேறிச் செல்ல முடியாது அல்லது அமர்ந்து ஓய்வெடுக்க முடியாது. சில வீரர்கள் நின்றவாறே உறங்கி விடுவார்கள். சில சமயங்களில், சீற்றத்துடன் வரும் புயல் காற்றினூடே எங்கள் உடல்களின் மீது மழை சாட்டையாய் விளாச, நாங்கள் அணிவகுத்துச் சென்றோம். இந்தச் சூழ்நிலைகளில் நாங்கள் எங்கள் கைவிளக்குகளைப் பயன்படுத்த முடியாது. பாதைகளோ வழுக்கிக் கொண்டு அபாயகரமானவையாக இருந்தன. சில சமயங்களில் நாங்கள் இரவில் குறைந்த தூரமே நடந்தோம். மழையில் நனைந்து இரவெல்லாம் வெட்டவெளியில் கழிக்க நேரிட்டது. மலைப் பாதையின் அகலம் இரண்டடிக்கும் மேல் எங்குமே இல்லை. ஒருவர் எப்படியாவது அந்தப் பாதையில் படுத்துவிட்டு, திரும்ப முனைவாரானால் மலைச் சரிவில் உருண்டு செல்வதைத் தவிர்க்க முடியாது. எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய கற்பாறைகள் துருத்திக் கொண்டிருந்தன. பாதைகூட கூரிய கற்கள் நிறைந்ததாக இருந்தது."

அசைக்க முடியாத இலட்சிய வெறியோடும், உறுதியான மனநிலையோடும் நெடும்பயணத்தில் கலந்து கொண்ட வீரர்களுக்கு, கொடிய அனுபவங்களாக நேர்ந்த உடல் உபாதைகள் குறித்து நெடும்பயணத்தில் கலந்து கொண்ட மருத்துவர் நெல்சன் ஃபு என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார் :

"நெடும்பயணத்தின்போது எங்களில் மிகப் பலருக்கு இதய நோய் வந்தது. மேலும்பலருக்கு அதிக மனஅழுத்தத்தின் காரணமாக நரம்பியல் கோளாறுகள் ஏற்பட்டன. நெடும்பயணம் முடிவுற்ற உடனேயே எங்களில் எண்ணற்றோருக்கு கால்களிலும், பாதங்களிலும் புண்கள் ஏற்பட்டன. மோசமான நிலைமைகள் காரணமாகவும், காயங்கள் காரணமாகவும், பொதுவான ரத்த சோகை காரணமாகவும் அப்புண்கள் ஏற்பட்டன. நெடும்பயணத்திற்காக ஆயிரம் டாலருக்கு மட்டுமே மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகளை எங்களால் வாங்க முடிந்தது. க்யாங்சி, க்வாங்டங் மற்றும் ஹுனானில் மலேரியா, வயிற்றுப்போக்கு ஆகியவை முதன்மையான துன்பங்களாக இருந்தன; ஸ்ஜெகவான், கான்சு மற்றும் ஷென்சியில் வயிற்றுப்போக்கு, டைபாய்டு மற்றும் இன்ஃப்ளுவென்சா ஆகியவையும், சிகாங்கில் மலைநோய், செரியாமை, டைபாய்டு மற்றும் ஒரு வகைக் கண்நோய் ஆகியவையும், ஷென்சியில் காலரா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களும், யூனானில் அயோடின் குறைவால் தைராய்டு தொல்லைகளும் பெருந்துன்பங்களாய் அமைந்தன. "

அமெரிக்க செய்தியாளர் எட்கர் ஸ்நோ என்பவர், "சீனாவின் மீது ஒரு சிவப்பு நட்சத்திரம்" என்ற தனது நூலில் நெடும்பயணத்தின் சில பகுதிகளை பின்வருமாறு விளக்குகிறார் :-

"சாகசம், ஆராய்ச்சிப் பயணம், கண்டுபிடிப்பு, மனிதத் துணிச்சல் மற்றும் கோழைத்தனம், களிப்பு மற்றும் வெற்றி, துன்பம், தியாகம் மற்றும் விசுவாசம், இவையெல்லாம் கடந்து மனிதனிடமோ, இயற்கையிடமோ, கடவுளிடமோ, மரணத்திடமோ தமது தோல்வியை அனுமதிக்காத ஆயிரக் கணக்கான இளைஞர்களின் சவாலைப் போன்ற மங்கா மனவெழுச்சி, இறவா நம்பிக்கை மற்றும் வியத்தகு புரட்சிகர நன்னம்பிக்கை இவையெல்லாமும், இன்னும்கூட பலவும், நவீன காலங்களில் இணையற்றதானதொரு இந்த நெடும்பயணத்தின் வரலாற்றில் புதைந்து கிடப்பதாகத் தெரிகிறது."

"நீண்ட பயணத்தின் சோதனைகளைக் கண்டு

செஞ்சேனை அஞ்சவில்லை!

ஆயிரம் மலைகளையும் நதிகளையும்

அது ஒரு பொருட்டாகக் கருதவில்லை!"

என்று நெடும்பயணத்தின்போது இயற்றிய கவிதை ஒன்றில் மாவோ குறிப்பிட்டிருந்தார்.

நெடும்பயணத்தின் வழியில், 1935, ஜனவரி மாதத்தில் கட்சியின் தலைவராக மாசேதுங் நியமிக்கப்பட்டு, மத்தியக் கமிட்டி மற்றும் செஞ்சேனை ஆகியவை மாசேதுங் தலைமையில் கொண்டு வரப்பட்டன.

பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்துடன் மாசேதுங், சியாங்கே ஷேக்குடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். 1946, ஜுலைக்குப் பிறகு சீனாவில் உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தை அடைந்தது. "ப்ளா" எனும் மக்கள் விடுதலை இராணுவம் பல முனைகளுக்குச் சென்று, எதிரிகளின் இராணுவத்தை ஒன்றன்பின் ஒன்றாக தகர்த்தது. சியாங்கே ஷேக் இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு, போர்க் கைதிகளாக நடத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்களின் விருப்பத்துடனேயே மக்கள் விடுதலை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கோமின்டாங் இராணுவத்தை எதிர்த்து போரிட வைத்தனர்.

1948இல் படைபலத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஜுலை 1946இல் கோமின்டாங் இராணுவம் 43 லட்சம் பேர், "ப்ளா"வில் 12 லட்சம்தான். ஆனால், 1949 இறுதியில் கோமின்டாங் படைபலம் 29 லட்சமாக குறைந்தது. ஆனால் சேஞ்சேனை "ப்ளா" 30 லட்சத்திற்கும் அதிகமாக வளர்ந்து விட்டது. இராணுவ பலம், மக்கள் பலம், கொள்கை பலம் ஆகிய மூன்றும் சீனக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு சாதகமாக மாறியிருந்ததாலும், சோஷலிச நாடான சோவியத் யூனியனின் ஆதரவும் உதவியும் இருந்ததாலும், புரட்சி வெகு விரைவில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தது.

1949, ஜனவரியில் "ப்ளா" பீகிங் மாநகரத்தை போரிடாமலேயே கைப்பற்றியது. அதைச் சுற்றியுள்ள கிராமப் புறங்களையும் வளைத்துப் பிடித்தது. சியாங்கே ஷேக்கின் இராணுவம் பல பகுதிகளில் நிலைகுலைந்து போரைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஆர்வத்தை இழந்தது. இவ்வாறு நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் சீனப் புரட்சி, சீரிய தளபதி மாசேதுங் தலைமையில் மாபெரும் வெற்றியினைப் பெற்றது. 1949, அக்டோபர் முதல் நாளன்று பீகிங்கை தலைநகராகக் கொண்டு மாசேதுங் தலைமையில் சீன மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது.

"நூறு பூக்கள் மலரட்டும், நூறு கருத்துகள் முட்டி மோதட்டும் என்பது கலை வளர்வதற்கும், அறிவியல் முன்னேறுவதற்கும், நமது நாட்டின் சோஷலிச கலாச்சாரம் செழித்தோங்குவதற்கும் உரிய கொள்கையாகும். கலையில் பல்வேறு வடிவங்களும், கருத்துகளும் சுதந்திரமாக வளரலாம். அறிவியலில் பல்வேறு கருத்துகளும் சுதந்திரமாக முகிழ்த் தெழலாம். கலையின் குறிப்பிட்ட ஒரு நடையை அல்லது ஒரு சிந்தனை முறையைத் திணித்து, இன்னொன்றைத் தடை செய்ய நிர்வாக நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டால், அது கலை, அறிவியல் வளர்ச்சிக்குத் தீங்கு பயக்கும் என நாம் கருதுகின்றோம்"

என்ற மாவோவின் கருத்து இன்றளவும் விவாதிக்கப்பட்டு வருகிறது!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 19.11.2007)

# தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைகிறது!

ஐதராபாத். டிச. 4 –

4 மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மைக்கும் அதிகமான இடங்களில் முன்னிலை பெற்று ஆட்சியைக் கைப்பற்றுகிறது.

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா, சத்தீஸ்கர் மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு தொடர்ந்து விறுவிறுப்பாக நடைபெற்றது. (மூன்று மணி நிலவரப்படி) தெலுங்கானா மாநிலத்தில் ஆரம்பத்தில் இருந்தே காங்கிரஸ் முன்னணி வகித்து வருகிறது. ஆளும் சந்திரசேகர ராவின் பி.ஆர்.எஸ். கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அம்மாநிலத்தில் பா.ஜ.க.வையும் மக்கள் ஒட்டுமொத்தமாக புறக்கணித்துள்ளனர். தற்போதைய நிலவரப்படி, 119 தொகுதிகள் கொண்ட தெலுங்கானாவில் காங்கிரஸ் 65 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. பி.ஆர்.எஸ். கட்சி 40 இடங்களில் முன்னிலை பெற்று பின்னடைவை சந்தித்துள்ளது. பா.ஜ.க 11 இடங்களில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது. 2014 ஆம் ஆண்டு உதயமான தெலுங்கானா மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளாக சந்திரசேகர ராவ் முதலமைச்சராக இருந்து வருகிறார். தெலுங்கானாவில் சந்திரசேகர ராவின் பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சி அசைக்க முடியாத சக்தியாக திகழ்ந்தது. பி.ஆர்.எஸ். கட்சியின் கோட்டையை காங்கிரஸ் தற்போது தகர்த்துள்ளது. பெரும் பான்மையுடன் முன்னேறி வரும் காங்கிரஸ், தெலுங்கானாவில் முதல்முறையாக ஆட்சி அமைக்கிறது.

### சத்தீஸ்கர்

90 தொகுதிகள் கொண்ட சத்தீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸ் பா.ஜ.க. இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இரு கட்சிகளும் மாறிமாறி முன்னிலை வகித்து வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி, பா.ஜ.க. 52 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 36 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி 42 சதவிகித வாக்குகளை பெற்றுள்ளது. பா.ஜ.க. 45 சதவிகித வாக்குகளை பெற்றுள்ள நிலையில், தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பகேல் அவர் போட்டியிட்ட பதான் தொகுதியில், பா.ஜ.க. வேட்பாளரை பின்னுக்கு தள்ளியுள்ளார்.

### மத்தியப் பிரதேசம்

மத்தியப் பிரதேச மாநிலத்தில் மொத்தமுள்ள 230 சட்டப்பேரவை தொகுதிகளின் தேர்தல் முன்னணி நிலவரங்கள் வெளியாகி வருகின்றன. தற்போதைய நிலவரப்படி, பா.ஜ.க. 162 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. காங்கிரஸ் கட்சி 66 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி 3 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. இது வரை எண்ணப்பட்ட வாக்குகளில், காங்கிரஸ் கட்சி 40 சதவிகித வாக்குகளை பெற்றுள்ளது.

### ராஜஸ்தான்

ராஜஸ்தானில் மொத்தம் உள்ள 200 சட்டப்பேரவை தொகுதிகளில் 199 இடங்களில் தேர்தல் நடைபெற்ற நிலையில், முன்னணி நிலவரங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலவரப்படி 108 இடங்களில் பா.ஜ.க. முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கட்சி 75 இடங்களில் முன்னிலையில் நீடித்து வருகிறது. பகுஜன் சமாஜ் கட்சி 2 தொகுதிகளிலும், 9 இடங்களில் சுயேட்சைகள் முன்னிலை வகிக்கின்றன. எண்ணப்பட்ட வாக்குகளில், காங்கிரஸ் 39 சதவிகிதமும், பா.ஜ.க. 42 சதவிகிதமும் வாக்குகளை பெற்றுள்ளன. இதற்கிடையே, 40 தொகுதிகள் கொண்ட வடகிழக்கு மாநிலமான மிஸோரமில் சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மாட்டிக்கொண்ட அமலாக்கத்துறை



கடும் மழை, புயல்: நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்கு

# மக்கள் பிரதிநிதிகள் துணை நிற்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, டிச.4-

**கனமழை காரணமாக நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் துணை நிற்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.**

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,**

**அடுத்த இரு நாட்களுக்கு மழை/கனமழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கும் நிலையில் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் அவர்களது பகுதியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவிட வேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்குத் துணைநிற்க வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன் என்று வலியுறுத்தி உள்ளார்.**

உதவிக்கு TN SDMA மாநில உதவி எண்: 1070, மாவட்ட உதவி எண்: 1077, வாட்சாப்: 94458 69848, Chennai Corp : 1913 என்கிற தொலைபேசி எண்களை அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த இரண்டு நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் சொல்லொணா துயரை துடைக்க அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் மழை காரணமாக மாநிலம்முழுவதும் நிலவும் நிலைமைகளை கூர்ந்து கண்காணித்து அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளை நிவாரணப் பணிகளில் ஈடுபட கேட்டுக்கொண்டார்.

சென்னையில் புயல் எச்சரிக்கை மையத்தில் அரசு அதிகாரிகள் மேற்கொண்டு வரும் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அம்மையத்தில் பொதுமக்களிடமிருந்து தொலைபேசி மூலம் வந்த குறைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே நேரடியாகத் தொடர்புகொண்டு, குறைகளை கேட்டறிந்ததோடு, உடனிருந்த அதிகாரிகளிடம் அந்தக் குறைகளை உடனுக்குடன் களைய உத்தரவிட்டார்.

கடும் மழை காரணமாக எந்த ஒரு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றிரவு கீழ்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

**அடுத்த இரு நாட்களுக்கு மழை/கனமழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கும் நிலையில் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் அவர்களது பகுதியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவிட வேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்குத் துணைநிற்க வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்** என்று வலியுறுத்தி உள்ளார்.



நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டார். உடன் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,குடிப்பெயர்வோர் பாதுகாவலர் வெளியுறவுத் துறை அமைச்சகம் ராஜ்குமார் உள்பட பலர் உள்ளனர்.

அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# நெல்லை மாநகரத்தில் 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார்

நெல்லை, டிச.4-

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. 8 மற்றும் 9 வது நிகழ்ச்சியாக மாநகர மாணவரணி மற்றும் தொண்டர் அணி சார்பில் அரசு மருத்துவமனையில் பிறந்த 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்த நாளை முன்னிட்டு கடந்த 23.11.2023 முதல் 15.12.2023 வரை 46 தொடர் நிகழ்ச்சிகள் சார்பு அணிகளின் சார்பில் நடைபெற்று வருகிறது.

முதல் நாளான கடந்த 23 ம் தேதி நெல்லை டவுண் சந்திபிள்ளையார் கோவில் அருகில் இளைஞர் அணி சார்பில் 46 கிலோ கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.அதனை தொடர்ந்து பிறந்த நாள் விழா நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் 8 மற்றும் 9வது நிகழ்ச்சியாக 27.11.2023 அன்று நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 16 குழந்தைகளுக்கு மாநகர மாணவரணி சார்பில் 13 தங்க மோதிரமும்,தொண்டர் அணி சார்பில் 3 குழந்தைகளுக்கு தங்க மோதிரமும் ஆக மொத்தம் 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வு மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம் பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன்(துச்சை) நமச்சிவாயம் (நெல்லை)அன்டன் செல்லத்துரை(பாளை) ஆகியோர் தலைமையில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான்,வழக்கறிஞர் இனியன், அன்பழகன் என்ற ரவி, செல்வம் ஆகியோர் முன்னிலையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அணிவித்தார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாணவரணி வினோத், மாநகர தொண்டர் அணி அமைப்பாளர் சித்திக், மற்றும் தொண்டரணி நிர்வாகிகள் நாராயணன்,கோட்டூர் மீரான், வெங்கடேசன்,சக்திவேல், ரகுமான்ஷா, வயல் தெரு வெங்கடேஷ்,அழகு நம்பி ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி பாலன் உள்பட மாநகர நிர்வாகிகள்,பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

கீரனூர் பேரூராட்சி - நரிக்கல்பட்டி பகுதிகளில்

# புதிய சிமெண்ட் சாலை - வட்டார பொது சுகாதார மையம் கட்டுதல் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அடிக்கல் நாட்டினார்!

திண்டுக்கல், டிச.4-

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், கீரனூர் பேரூராட்சிக்குட்பட்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதியில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தாழையூத்து ஊராட்சி, நரிக்கல்பட்டியில் ரூ.69.00 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார மையம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு 01.12.2023 அன்று அடிக்கல் நாட்டினார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கீரனூர் பேரூராட்சியில் 200 வீடுகள் கட்டப் பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் சாலைகள், சாக்கடைகள் பழுதடைந்துவிட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன், முயற்சி மேற்கொண்டு, கீரனூர் பேரூராட்சியில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை அமைப்பதற்கு அனுமதி பெற்று, அதற்கான பணிகள் 01.12.2023 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் 4 பகுதிகளில் ஒவ்வொரு குடியிருப்பும் தலா ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் லிப்ட் வசதியுடன் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அனுமதி அளித்துள்ளார்கள். அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் கீரனூாரில் 432 குடியிருப்புகள், ஒட்டன்சத்திரத்தில் 480 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளார்கள்.

கீரனூர் பகுதியில் விவசாயிகளின் கோர்க்கைகளை ஏற்று, வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ளன. கீரனூர் பேரூராட்சிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஒரு நபருக்கு தினமும் 135 லிட்டர் தண்ணீர் வழங்கப்படவுள்ளது. கீரனூர் பேரூராட்சி அலுவலகம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

கீரனூரில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டப்படவுள்ளது. அதற்காகு விரைவில் அடிக்கல் நாட்டப்படவுள்ளது. கீரனூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்குள்ள வீடுகளை சீரமைக்க கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதியான நபர்கள் அனைவரும் பயனடைய வேண்டும் என்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார்கள். எனவே, இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் இசேவை மையங்கள் வாயிலாக மேல்முறையீடு செய்து, வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தை நாடி, பயன் பெறலாம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காக்கும் நம்மைக் காப்போம் 48 உட்பட பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இன்று நரிக்கல்பட்டி ஊராட்சியில், 15வது நிதிக்குழு மானியத்தில் ரூ.69.00 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதே போல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை சீரமைத்து பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காவிரி குடிநீர் திட்டம் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

மகளிர் மேம்பாட்டுக்காக நகரப் பேருந்துகளில் கட்டமில்லா பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் உயர்கல்வி படிப்பில் சேர்ந்தால் மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் என பல திட்டங்கள் மகளிருக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நரிக்கல்பட்டியில் நெசவுத் தொழிலுக்கு ஒரு பூங்கா அமைக்கப்படும்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதன் பயன்கள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். இந்த அரசுக்கு மக்கள் என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், பழனி வருவாய் கோட்டாட்சியர் திரு.செள.சரவணன், உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) திருமதி ரா.மனோரஞ்சிதம், கீரனூர் பேரூராட்சித் தலைவர் கருப்புச்சாமி, செயற்பொறியாளர் அசோகன், உதவி செயற்பொறியாளர் திருமதி சுதா, உதவிப் பொறியாளர் ஜோஸ், துணை இயக்குநர்(சுகாதாப் பணிகள்) மரு.அனிதா உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருவாரூர் மாவட்ட வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# நெல்லையில் 612 பேருக்கு பணி நியமன ஆணை!

## பேரவைத் தலைவர் மு. அப்பாவு வழங்கினார்!

நெல்லை.டிச.4.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ச்சி பெற்ற 612 வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகளை சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் முன்னிலையில் வழங்கினார்.

நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ச்சி பெற்ற 612 வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகளை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், குடிப்பெயர்வோர் பாதுகாவலர் வெளியுறவுத் துறை அமைச்சகம் ராஜ் குமார், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

தமிழ்நாட்டில் 100 தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி இதுவரை தமிழ்நாட்டில் 70 தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 27,394 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெறுவதற்காக பலரும் தனியார் ஏஜென்சிகளிடம் பல லட்சம் கொடுத்து ஏமாற்றம் அடைகின்றனர். எனவே அரசின் அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்த 170 நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் நெல்லைக்கு வரவழைக்கப்பட்டு அரங்குகள் அமைக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்துள்ளார்.

வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு எந்த பாதிப்பு ஏற்பட்டாலும் அவர்களை 5 நாட்களில் சொந்த ஊருக்கு அழைத்து வர முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு தனி அமைச்சகத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந்துள்ளார். முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி வருகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை நெல்லை மாவட்டத்தில் நடத்தப்பட்ட 6 பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களில் 4,810 பேர் பணி நியமனம் பெற்றுள்ளனர். வேலை நாடும் இளைஞர்கள் தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்படும். இது போன்ற தனியார் வேலை வாய்ப்பு முகாம்களை பயன்படுத்தி வேலை வாய்ப்பு பெற்று தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் கல்லூரி முதல்வர் வேல்முருகன்,மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா மண்டல வேலை வாய்ப்பு இணை இயக்குனர் சண்முகசுந்தர், மாவட்ட வேலை வாய்ப்பு நிறுவன உதவி இயக்குனர் மரிய சகாய ஆண்டனி,அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன நிர்வாக இயக்குனர் லதா, ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன்,மகளிர் அணி அனித்தா, பொறியாளர் அணி சாய்பாபா,பாளை வட்டாட்சி யர் சரவணன் உள்பட அரசு அலுவலர்கள்,இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜாமுகமது ஏற்பாட்டில் ஹைகிரவுண்ட் அருகில் எம்.ஓ.சி.யில் உள்ள ஆதரவற்ற 300 குழந்தைகளுக்கு மதிய உணவை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான் வழங்கினார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினி தேவன்,இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், செல்வம், அருண்குமார்,கண்ணன், நவ்ஷாத்,சக்தி கீதா,ராஜவர்மன், அனித்தா,வீரபாண்டியன், ஜெனிபர்சாம்,தேவிகா,ஜோதி பிரியா,ரேவதி அசோக்,வின்சர், வினோத்குமார்,முருகன், கந்தசாமி,நடராஜன்,அருள் சங்கர்,கார்த்திக் தம்பான்,அருள் ராஜா,கழக வழக்கறிஞர்கள் சிலம்பரசன்,செந்தூர் பாண்டியன்,ஜெயசிங்,முகமதுஷா,தேவிகா,ஜோதிப்பிரியா, கார்டன் சேகர்,உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் கனமழையை எதிர்கொள்ள மின்துறையில்

# 13 ஆயிரம் களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!



சென்னை, டிச.4-

வள்ளுவர்கோட்டம் துணை மின் நிலையத்தில், மின் மாற்றி பழுது நீக்கும் பணியினை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

சென்னை நுங்கம் பாக்கத்தில் அமைந்துள்ள 110/11 கி. வோ. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலையத்தில் உள்ள 16 எம்.வி.ஏ. உயரழுத்த மின்மாற்றியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுது நீக்கும் பணியினை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு செய்தார்.

முன்னதாக, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் வங்கக்கடலில் உருவாகி உள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மின்சாரத்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வு கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

எதிர்வரும் கனமழையை எதிர்கொள்ள, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, மின்சாரத்துறை எல்லாவிதமான நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியதைப் போல் அசம்பாவிதங்கள் மற்றும் பேராபத்துக்கள் ஏதும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து மின்சார வாரிய அதிகாரிகளுக்கும் அறிவுரைகளை வழங்கி வருகிறோம். குறிப்பாக, இந்த புயல் காலத்தில் மக்களுக்கு சீரான மின்சாரம் எந்த இடத்திலும் தடைபடாமல் வழங்குவதற்கு வேண்டிய உத்தரவுகளை அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறோம்.

மேலும், மருத்துமனைகள், குடிநீர் வழங்கல் வசதி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளோம். அதேபோல முதலமைச்சர் அவர்களின் அறிவுரையினை ஏற்று இங்கு இருக்கக் கூடிய மாநில பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் நம்முடைய மின்வாரிய துறையின் அலுவலர்கள் பணியாளர்கள் களப்பணியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாவட்டந்தோறும் இருக்கக்கூடிய கட்டுப்பாட்டு மையங்களில் மின்சார துறையின் பொறியாளர்கள் களப்பணியிலே இருக்கிறார்கள். அதேபோல், அந்தந்த செயற்பொறியாளர்களின் கீழ் பணியாளர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு தேவையான இடங்களில் பணிகள் மேற்கொள்ள இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனமழை மிகப் பெரும் கனமழையாக இருந்தாலும் சரி, புயலாக நம்மைக் கடந்து சென்றாலும் அதனை எதிர்கொள்ள தமிழகம் முழுவதும் 3,00,000 மின் கம்பங்கள், 15,000 கி.மீ. மின் கம்பிகள் மற்றும் 15,000 களப்பணியாளர்கள் 24X7 தயார் நிலையில் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவையான தளவாடப் பொருட்கள் எந்நேரமும் கையிருப்பில் உள்ளதை உறுதி செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல கடலோர மாவட்டங்களில் குறிப்பாக கனமழை எதிர்ப்பார்க்கும் திருவள்ளூர் அல்லது சென்னை போன்ற இடங்களில் இன்னும் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மணலி போன்ற பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளிலும், கடலோர பகுதிகளிலும் நம்முடைய மின் நிலையங்களிலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகம் முழுமைக்கும் தேவையான ஜே.சி.பி., கிரேன் போன்ற வாகனங்கள் மற்றும் மரம் வெட்டும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்கள் தேவைக் கேற்ப தயாராக வைக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலையிலும் இந்த மழைக்காலத்தை எதிர்கொண்டு பொதுமக்களுக்கு சீரான தடையற்ற மின்சாரம் வழங்குமாறு பார்த்துக் கொள்ளவும், அப்படியே ஏதாவது பழுது ஏற்பட்டாலும் அதனை உடனடியாக நீக்கி மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக, இங்கே சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் 110 கி.வோ துணைமின் நிலையத்திலுள்ள உயரழுத்த மின்மாற்றியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடனடியாக பழுது நீக்கி இயக்கத்திற்கு கொண்டு வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

எனவே, மின்வாரியத்தை பொருத்தமட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்வாரியம் தயாராக உள்ளது. இரவு நேரங்களில் குறிப்பாக மழைக் காலங்களில் ஏற்படும் மின் தடைக்கு புகார் அளிக்க மின்னகத்தில் ஒரே நேரத்தில் 65 அழைப்புகளை ஏற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதனை கண்காணிக்க தனியாக அலுவலர்களும் நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சாலை ஓரங்களில் மழை நீர் தேங்கி மின் சாதனங்கள் ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது மின் கம்பி அறுந்து விழுந்திருந்தாலோ உடனடியாக 24 மணி நேரமும் செயல்படக் கூடிய மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்திற்கு 94987 94987 என்ற எண்ணிற்கோ அல்லது மின் தடை நீக்க மையத்திற்கோ தகவல் தெரிவிக்குமாறும், பொதுமக்கள் மழைகாலங்களில் மின் சாதனங்களை பயன்படுத்துவதில் கவனத்துடன் செயல்படுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

---

கொளத்தூர், பாலாஜி நகர் பகுதியில்

# மழைநீர் வெளியேற்றும் பணிகள் - மருத்துவ முகாம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, டிச. 3

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு நேற்று (02.12.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர், நேர்மை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள், மருத்துவ முகாம்கள், சாலைகளை தூய்மைப் படுத்துதல் மற்றும் உணவு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே. சேகர் பாபு, நேற்று மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான அனைத்துத் துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.

நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாத்திடும் வகையில் பாலாஜி நகரைச் சேர்ந்த நேர்மை நகரில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்ட பின், பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றப்படும் பணிகளையும், சாலைகளை தூய்மைப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அக்பர் ஸ்கொயர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவினை வழங்கினார்,

இந்த ஆய்வின் போது நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே. ஜே.பிரவீன்குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், ஐசிஎப் பா. முரளீதரன், ஏ.நாகராஜன், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், என்.டி. தமிழ்ச்செல்வன். என். ராமச்சந்திரன், முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், கொத்தக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் நடைபெற்ற கலைஞரின் வரும்முன் காப்போம் திட்ட மருத்துவ முகாமில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டுத்திட்ட அட்டைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 02.12.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மரு.எஸ்.நமச்சிவாயம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழக மகளிரணி சார்பில் மதுரை மண்டல அளவில் நடைபெற்ற வினாடி வினா போட்டியை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு உள்ளிட்டோர் உள்ளனர்.

மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுவிழா வினாடிவினா போட்டி!

# தமிழ்நாட்டின் வரலாறு, திராவிடப் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

மதுரை, டிச.4-

தி.மு.க. மகளிர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி வினா’ மண்டல அளவிலான இரண்டாம் கட்டமாக மதுரை திருப்பரங்குன்றம் கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியை திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமை வகித்து, போட்டியாளர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் ஆறுதல் பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மதுரை வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலைஞர் 100 வினாடி வினா போட்டியில் கனிமொழி கருணாநிதி எம்.பி பேசியதாவது:

தமிழ்நாட்டின் வரலாறு, திராவிடப் பண்பாடு, கலைஞர் அவர்களின் ஆட்சி, திட்டங்கள் ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவே இந்த போட்டி நடத்தப்படுகிறது. இரண்டு லட்சம் போட்டியாளர்களிலிருந்து மண்டல அளவிற்கு வெற்றிப்பெற்று வந்த அனைவருக்கும் பாராட்டுக்கள். அடுத்த ஆண்டு அல்லது அதற்கு அடுத்த ஆண்டில் மீண்டும் இதே போன்ற போட்டிகள் நடைபெறும், எனவே இந்த முறை வெற்றி பெறாதவர்கள் வருத்தமடைய வேண்டாம். அடுத்த ஆண்டுகளில் பங்கேற்று வெற்றி பெறலாம் என்றார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினருமான தமிழரசி ரவிக்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் வ. வேலுசாமி, பெ.குழந்தைவேலு மற்றும் கழக நிர்வாகிகள், மாணவ, மாணவியர் கழகத்தினர் உள்ளிட்ட பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியில், மதுரை மண்டலத்தில் (திண்டுக்கல், தேனி, மதுரை) ஆகிய மாவட்ட குழுக்கள் பங்கேற்றனர். 18 வயதிற்கு உட்பட்டோர் காணப் போட்டியில் மதுரை அணி வெற்றிபெற்றது, இந்த குழுவில் ஷேக் மீன், சஞ்சய், நிதின் தங்கேஷ் ஆகியோர் பங்கேற்றனர். 18 வயதிற்கு மேற்பட்டோர் காணப் போட்டியில் மதுரை அணி வெற்றிபெற்றது, இந்த குழுவில் கதிர்வேல், தர்மராஜன், மூகாம்பிகா ஆகியோர் பங்கேற்றனர். இரு பிரிவிலும் மதுரை அணியே வெற்றி பெற்றது. இவர்கள் அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்கள் பெறும் குழுக்கள் மண்டல சுற்றுக்கு முன்னேறுவார்கள். இது ஒரு குழு வினாடி வினா போட்டியாக இருக்கும், ஒரு குழுவில் மூன்று நபர்கள் பங்குபெறுவர். கலைஞர் 100 வினாடி வினா போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டிகள், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளடக்கிய 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இரு பிரிவினருக்கும் தனித்தனியே நடைபெறும் இப்போட்டி மொத்தம் 5 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண் எடுத்த ஒரு குழு என, 39 குழுக்கள் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியில் பங்குபெறுவர்.

அரையிறுதியின் வெற்றியாளர்கள் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவார்கள். இரு பிரிவுகளிலும் இறுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணிகளுக்கு தலா ரூ. 10 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இரு பிரிவுகளிலும் 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இரு பிரிவுகளிலும் மூன்றாமிடம் பெறும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சம் ரொக்கப் பரிசு அளிக்கப்படும். வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்குகிறார் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

---

அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர்

# எம்.கே.மோகனின் அண்ணி - எல்.ரமாதேவி லோகநாதன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, டிச. 4 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், எம்.கே.கணேஷ் ராம் ஆகியோரின் அண்ணியாரும் - (நினைவில் வாழும்) டாக்டர் எம்.கே.லோகநாதன் அவர்களின் துணைவி யாரும், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகனின் பெரியம்மாவுமான எல்.ரமாதேவி லோகநாதன் அவர்கள் (வயது 69) 1.12.2023 - வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து ஏராளமான கழக முன்னணியினர், அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (3.12.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை ஆழ்வார்பேட்டை, வீனஸ் காலனி, 2 வது குறுக்கு தெரு, ஏ.பிளாக், எண்.21, எனும் முகவரியில் உள்ள இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஐ.ஜி.ஆபிஸ் பின்புறம் உள்ள மயிலாப்பூர் இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெற்றது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் அ.தி.மு.க., பா.ம.க. கட்சியினர் 20க்கும்மேற்பட்டோர் அக் கட்சியில் இருந்து விலகிசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர்மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருச்சியில் கழக வர்த்தக அணி சார்பில் அதன் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கலை இரவு நிகழ்ச்சியில் திண்டுக்கல் சக்தி குழுவினரின் தப்பாட்ட நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. வர்த்தக அணி நிர்வாகிகள், கழகத்தினர் ஏராளமானோர் விழாவில் பங்கேற்றனர்.



மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநாட்டு நிதியாக நீலகிரி மாவட்ட கழகம் ரூ.1 கோடியும், இளைஞர் அணி அமைப்பாளர் சார்பில் ரூ.10 லட்சம், இளைஞர் அணி நிர்வாகிகள் சார்பில் ரூ.12 லட்சம் ஆகிய தொகைக்கான காசோலையினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர். இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆர்.இராசா எம்.பி., அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### "இந்தியா" கூட்டணியின் 4வது கூட்டம் டெல்லியில் நடைபெறும்

# டிசம்பர் 6-ம் தேதி "இந்தியா" கூட்டணியின் அடுத்தக் கூட்டம்!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.4-

பீகார் தலைநகர் பாட்னாவில் கடந்த ஜூன் மாதம் காங்கிரஸ், திமுக, ஐக்கிய ஜனதாதளம், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 20க்கும் மேற்பட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். பின்னர் ஜூலை 17 மற்றும் 18ம் தேதிகளில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் 2வது கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், Indian National Developmental Inclusive Alliance என்பதன் சுருக்கமாக INDIA என இக்கூட்டணிக்கு பெயர் சூட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பையில் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 28 கட்சிகள் பங்கேற்றன. இந்தியா கூட்டணியை ஒருங்கிணைக்க 13 பேர் கொண்ட ஒருங்கிணைப்பு குழுவும், பிரச்சாரம், சமூக ஊடகம் உள்ளிட்ட குழுக்களும் இக்கூட்டத்தில் அமைக்கப்பட்டன. இந்நிலையில், இந்தியா கூட்டணியின் அடுத்த கூட்டம் டிசம்பர் 6ம் தேதி மாலை 6 மணியளவில் டெல்லியில் நடைபெறும் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவித்துள்ளார். இதுதொடர்பாக 'இந்தியா' கூட்டணி தலைவர்களுக்கு கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா: நிகழ்ச்சியில்

# கழக வர்த்தகர் அணி சார்பில் கலை இரவு நிகழ்ச்சி!

## அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் தலைமை!

திருச்சி, டிச. 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக வர்த்தகர் அணி சார்பில் மாபெரும் கலை இரவு நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் கி.பாரதி ராஜா குழுவினரின் சிலப்பதிகாரம், சாக்ரடீஸ் நாடகங்களும், திண்டுக்கல் சக்தி குழுவினரின் தப்பாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம் கரகாட்டம் இடம் பெற்றன.

விழாவில் கழக வர்த்தக அணியின் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் நல உதவிகளை வழங்கிப் பேசுகையில், வி.பி.சிங், தேவகவுடா, குஜ்ரால், மன்மோகன் சிங் என நான்கு பிரதமர்களை தந்து, காமராஜர் போல் கிங்மேக்கராகதிகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். அதிக எழுத்துக்கள் எழுதியவர், அதிக நாட்கள் முதல்வராக, சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அதிக சாதனைகள் செய்தவர் கலைஞர்.

உலகிலேயே காலை உணவைகுழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்தில் தந்து, வாழும் காமராஜராய், வாரத்திற்கு 5 முட்டை தந்த கலைஞராய், திகழ்பவர் தங்கத்தளபதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

வாக்கு உரிமை இல்லாத - ரேஷன் கார்டு இல்லாத பிச்சைக்காரர்களுக்கு - தொழு நோயாளிகளுக்கு முகாம் அமைத்தவர். தொழுநோயை ஒழித்தவர் கலைஞர். கொரோனா காலத்தில் வார்டு வார்டாக சென்று கொரானாவை விரட்டியவர் தளபதி.

தி.மு.க. தலைமை வர்த்தகர் அணி சார்பில் கலைஞருக்கு இன்று "கலை இரவு" நிகழ்ச்சியாக திருச்சியில் கொண்டாடுகிறோம். விரைவில் தூத்துக்குடி, மதுரை, கோயம்புத்தூர், வேலூரில் கொண்டாடுவோம்.

கழுதை தேய்ந்த கட்டெறும்பாக பா.ஜ.க. தேய்ந்து கொண்டிருக்கிறது. கர்நாடகா, பீகார், மேற்கு வங்கம், ஏன் உ.பி.யில் கூட மிகப்பெரிய சரிவு உள்ளது.

தேசிய அளவில் பா.ஜ.க. கூட்டணியில் 37 கட்சி. ஆனால் 27 கட்சிக்கு ஒரு எம்.பி. கூட இல்லை இருந்த அ.தி.மு.க., மிசோரமில் ஆளும் கட்சி என ஒவ்வொன்றாக கழலுகிறது.

இறுதியில் பா.ஜ.க.விற்கு, ஐ.டி.யும், சி.பி.ஐ.யும் தேர்தல் கமிஷனும், மாநில கவர்னர்களும் மட்டுமே மிச்சப்படுவர். பகுதி, பகுதியாக நீதி மன்றம் கை கொடுக்கிறது.

150 ஏக்கர் இடத்தை கொடுத்து, 6.5 கோடி செலவை செய்து நம் மாநில அரசுக்கு தீங்கு செய்து வரும் கவர்னர் தேர்தல் முடிந்த உடன் விரட்டப்பட வேண்டும்.

வழக்கு என்றவுடன் எதற்கு அவசரமாக 10 மசோதாக்களை திருப்பி அனுப்ப வேண்டும். ஒப்புதல் கொடுத்திருக்கலாமே!

தமிழ்நாட்டை இனி தமிழ்நாடு என்று சொல்லவே கூடாது என்பது. அத்துடன் குடியரசு விழா அழைப்பிதழிலும் "தமிழகம்" என்று போட்டதுடன் கோபுர இலச்சினையை எடுத்துவிட்டு மத்திய அரசின் இலட்சினையை போட்டார். டெல்லி கூப்பிட்டு சப்தம் போட்ட குட்டுக்கு பின் மாற்றினார் ஆளுநர்.

"திராவிட நாடு" கி.பி.600வது ஆண்டிலேயே நடைமுறையில் இருந்தது. ஆனால் கவர்னரோ வெள்ளைக்காரன் உருவாக்கியது என்கிறார் பின் அடங்கினார்.

சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மரியாதை இல்லை என்பது. தியாக தீபம் சங்கரையாவுக்கு டாக்டர் பட்டம் கொடுப்பதை திருப்பி அனுப்பி மக்களிடம் வாங்கி கட்டிக் கொள்வது, டெல்லியில் அரசு அணிவகுப்பில் நம் வண்டிகளுக்கு அனுமதி தராதபோது, தமிழக அரசு தமிழ்நாடு முழுவதும் பயணிக்க வைத்துப் பார்க்க நம் முதல்வர் வைத்தபோது அமைதியாக இருந்தவர்தானே ரவி.

அ.தி.மு.க. பொறுத்தவரை ராஜாஜிக்கு பின், சுதந்திரா கட்சி எப்படி ஆனதோ, காமராஜருக்கு பின் பழைய காங்கிரஸ் எப்படி தேய்ந்து காணாமல் போனதோ அப்படித்தான் அ.தி.மு.க. இந்த தேர்தலோடு காணாமல் போகும். அல்லது சிதைந்து போகும்.

தமிழகம் இன்னும் அரை நூற்றாண்டு தலைவர் தளபதி புகழ்பாடும் வரும் டிசம்பர் 17ல் சேலம் மாநாட்டில் சந்திப்போம். "திரண்டு வாருங்கள்" என தி.மு.க. வர்த்தகர் அணி செயலர் தலைமை தாங்கி பேசினார்.

நிகழ்சியில் கலைஞரின் கை வண்ணத்தில் உருவான பராசக்தி, மனோகரா, சாக்கரடீஸ், கண்ணகி மதுரை, மகிழ்தப்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம் சிறப்பாக நடந்தது.

நிகழ்ச்சியில் மாநில துணைத் தலைவர் அரசு கொறடா செழியன், இணைச் செயலாளர் திண்டுக்கல் ஜெயின், பெரம்பலூர் பெரியசாமி, துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வம், நாமக்கல் கே.எஸ்.மூர்த்தி, கோவை முருகவேல், தாமரை பாரதி, வி.பி.மணி, பாண்டி செல்வம், எம்.எஸ்.பாண்டியன், சிவகாசி வனராஜ், இராமர், மதுரை தனசெல்வம், பல்லவி ராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், சத்யமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர்கள் புதுக்கோட்டை முத்து, திண்டிவனம் விஜயராகவன், விழுப்புரம் வெங்கடேஷ், விழுப்புரம் சங்கர், புதுக்கோட்டை குழந்தை, கும ரேசன், திருச்சி சிங்காரம், கடலூர் ரங்கநாதன், பண்ருட்டி குணசேகர், தென்காசி முத்துக்குமார், சரவணகுமார், மதுராந்தகம் தினகரன், இராணிப்பேட்டை தியாகராஜன், திருவள்ளூர் நேதாஜி, ஸ்ரீமுஷ்ணம் முத்து ராமலிங்கம், கிருஷ்ணகிரி மணிகண்டன் என 5000க்கும் மேற்பட்டோர் குவிந்தனர்.

### கனமழை பெய்தபோதும் - மழை நின்ற பின்

# தண்ணீர் தேங்காத சூழலை ஏற்படுத்த திட்டமிட்டு செயலாற்றுகிறோம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, டிச.4-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கியிருந்த தண்ணீரை வெளியேற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று இயல்பு நிலை திரும்பி வருகிறது. தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நீர் இறைப்பான் மோட்டார்களை அந்தந்த இடங்களிலேயே இந்த பருவமழை முடிகின்ற வரையில் தொடர்ந்து வைத்திருப்போம். கனமழை பெய்தாலும் கூட மழை நின்றபின், முழுவதுமாக தண்ணீரில்லாத ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு, இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அளித்த பேட்டி வருமாறு:-

கன மழையினால் தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளாக 27 இடங்கள் கண்டறியப்பட்டன. இப்பகுதியில் போர்க்கால அடிப்படையில் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள சிறப்பு அலுவலராக திரு. கணேசன் ஐஏஎஸ் அவர்களையும், தலைமையிடத்திலிருந்து ஒரு கண்காணிப்பு பொறியாளர் மற்றும் இரண்டு செயற்பொறியாளர்களை கூடுதலாக நியமித்திருக்கின்றோம். கன மழை பெய்ததினால் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த பகுதி மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்தையும் தயார் நிலையில் வைத்திருக்கின்றோம். வருகின்ற காலங்களில் அந்தப் பகுதிகளில் கூட மழை நீர் தேங்காத அளவிற்கு உரிய கட்டமைப்புகள் நிச்சயம் ஏற்படுத்தப்படும்.

நேற்றைய தினம் இதே பகுதியில் நாங்கள் ஆய்வுக்கு வந்தபோதும், மீண்டும் இன்று காலை ஆய்வு செய்தபோதும் செய்தியாளர்களாகிய நீங்களும் உடன் வந்தீர்கள். இப்பகுதி மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொன்னார்கள் என்பதை நீங்களும் நேரடியாக பார்த்தீர்கள். முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இந்த பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் தான் இருப்பார்கள், அதற்குண்டான அனைத்து பணிகளையும் இந்த அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் உறுதியாக செய்யும்.

மழைநீரோடு, கழிவு நீர் தேங்கிய பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் ஜெட்ராடிங் மெஷின், சூப்பர் சக்சன் போன்ற இயந்திரங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் முழுமையாக கழிவுநீர் அகற்றுகின்ற பணிகளும் முடிவுக்கு வரும். பெருமழை வருகின்ற போது எந்த ஆட்சியாக இருந்தாலும் தண்ணீர் தேங்கும். அப்படி தேங்குகின்ற தண்ணீரை உடனடியாக வெளியேற்றுவதுதான் அரசின் திறனாகும். அப்படி தேங்கிய தண்ணீரும் ஒரு நாளைக்குள் வெளியேற்றப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் சென்னையின் மழை நீர் கட்டமைப்புகளை மேம்படுவதற்காக ரூ. 6,400 கோடி செலவிட்டுள்ளதாக கொள்கை விளக்க குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 2021 ஆம் ஆண்டு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின் போது, சென்னையில் மழை நீர் கால்வாய்களை கட்டி விட்டோம், சிங்கப்பூர் போல் ஓரிடத்தில் கூட மழை நீர் தேங்காது என்று அறிவித்தார்.

2021 ஆம் ஆண்டு மே மாதம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெய்த பெரும் மழையில் பல இடங்களில் வாகனங்களே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இன்றைக்கு அந்த நிலை இல்லை. அனைத்தும் முக்கிய வீதிகளும் முழுமையான பராமரிப்பிலே இருக்கின்றன. எங்குமே மழை நீர் நிற்கவில்லை. இவ்வளவு தொகை செலவு செய்ததன் விளைவாகத்தான் முக்கிய பகுதிகளில் எங்கும் தண்ணீர் தேங்க வில்லை.

கடந்த மழைக்காலங்களின் போது 100 அடி சாலை, ஜவகர் நகர், எஸ் ஆர்பி கோயில் தெரு, பல்லவன் சாலை, செல்வி நகர், செந்தில் நகர் போன்ற பகுதிகளில் இடுப்பளவு தண்ணீர் தேங்கி இருந்த நிலையிருந்தது. இந்த கட்டமைப்புகளை உருவாக்கியதன் பலனாகத்தான் இன்றைக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட எங்கும் நிற்கவில்லை.

கடந்த காலங்களில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் கூட இடுப்பளவிற்கு தண்ணீர் தேங்கியிருந்த நிலை இருந்தது. தற்போது அங்கும் தண்ணீர் இல்லை. முக்கிய சாலைகளான பிரகாசம் சாலை, வால்டாக்ஸ் சாலை, ராஜாஜி சாலை போன்றவற்றிலும் தண்ணீர் இல்லை.

முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட கட்டமைப்புகளை உருவாக்கியதால் தான் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை. குறிப்பாக ஒன்றரை மணி நேரத்தில் 19 சென்டிமீட்டர் அளவிற்கு மழை பெய்ததினால் தான் தண்ணீர் தேங்கியது. அப்படி தேங்கிய தண்ணீரை வெளியேற்ற கால்வாய்கள் உடனுக்குடன் சுத்தம் செய்யப்பட்டு, எல்லா இடங்களிலும் தற்போது தேங்கிய தண்ணீர் அகற்றப்பட்டு விட்டது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். இதிலிருந்து தான் ஆட்சியின் திறன் வெளிப்படுகிறது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், கலைஞர் நூற்றாண்டு விழா, திமுக பவள விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா ஆகிய முப்பெரும் விழாக்களை முன்னிட்டு, டி.என்.பாளையம் தி.மு.கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் முன்னிலையில் திராவிட மாடல் ஆட்சிக்கு பெறும் வழிகாட்டுவது கலைஞரின் கொள்கை வளமா! மக்கள் நலமா? என்ற தலைப்பில் திண்டுக்கல் ஐ_லியோனி நடுவராக பங்கேற்ற மாபெரும் பட்டிமன்றம் நடைபெற்றது. நிகழ்வில் வாணிப்புத்தூர் பேரூர் கழக செயலாளர் சேகர்(எ)பழனிச்சாமி, பேரூர் மன்றத் தலைவர் எம்.சிவராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர், கிளை கழக செயலாளர்கள், பேரூர் மன்றத் தலைவர்கள், டி.என்பாளையம் ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், வார்டு குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (02.12.2023) தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள 100 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினை இராயபுரம் மண்டலம், புதுமனைக் குப்பம், மாதா சர்ச் தெரு, புனித பீட்டர்ஸ் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), தா.இளையஅருணா (நகரமைப்பு), பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.செல்வவிநாயகம், மாமன்ற உறுப்பினர் ரா. சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கலைஞர்
100
1924-2023
சிவகங்கை மாவட்டம்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும்
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
திராவிட கழகப் போராளி
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்
கே.ஆர்.பெரியகருப்பன்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
சிவகங்கை மாவட்டச் செயலாளர்
ஆ.தமிழரசி ரவிக்குமார் B.Com, MLA
முன்னாள் அமைச்சர், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்
மாநில மகளிர் தொண்டரணி இணை செயலாளர்
TAMILARASIRAVIKUMAR_OFFCIAL
@TAMILARASIRAVI13
ஆ.தமிழரசிரவிக்குமார்
@tamilarasiravikumardmk1656



சிவகங்கை மாவட்டத்தில்
04.12.2023 திங்கள் அன்று
N.வைரவன் பட்டியில்
இளைஞர் அணி
செயல் வீரர்கள் கூட்டம்




**அன்று**

நம் முதல்வர் தலைமையில்
உங்கள் தொகுதியில் ஸ்டாலின்

**இன்று**

நம் சின்னவர் தலைமையில்
செயல் வீரர்கள் கூட்டம்

சிவகங்கை பைபாஸ் சாலையில் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி மற்றும் அரளிக் கோட்டையில் கழகக் கொடி ஏற்றி வைக்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு

# உதயநிதி ஸ்டாலின்

*அவர்களே வருக. வருக..*

மகிழ்வுடன் : **கே.ஆர்.பெரியகருப்பன்**
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர்

## சிவகங்கை மாவட்ட தி.மு.க.

# இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட,

# சேலம் மாநாட்டில் ஒன்று கூடுவோம்!

## நீலகிரி மாவட்ட தி.மு.க இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**நீலகிரி, நவ. 3 -**

**இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் - கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட, சேலம் மாநாட்டில் கழக இளைஞரணியினர் ஒன்று கூடுவோம் என்று, நீலகிரி மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றினார்.**

மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.

நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து நீலகிரி மாவட்டத்தில் நீட்டுக்கு எதிராக பெறப்பட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான கையெழுத்துகளை கொண்ட அஞ்சல் அட்டைகளை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். அவரது உரை வருமாறு:-

சேலத்தில் நடைபெற இருக்கக்கூடிய நம் கழகத்தின் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு உங்களை எல்லாம் அழைப்பதற்காக இந்த நீலகிரி மாவட்டம் செயல்வீரர் கூட்டத்திற்கு நான் வருகை தந்திருக்கிறேன்.

இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் இவ்வளவு சிறப்பான செயல்வீரர் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்த நீலகிரி மாவட்டம் மலைகள், வனங்கள், ஆறுகள், விலங்குகள் நிரம்பிய மாவட்டம். பொதுவாக, எல்லோரும் மற்ற மாவட்ட நிர்வாகிகளைப் பார்க்கும் பொழுது, கழகத்தினரைப் பார்க்கும் போது இளைஞர் அணி தம்பிமார்களைப் பார்க்கும் பொழுது அனைவரும் ``ஊட்டிக்கு வாங்க, வந்து ரெண்டு நாள் தங்கி விட்டுப் போங்கள்" என்று கூப்பிடுவார்கள்.

### சேலத்திற்கு வாருங்கள்!

ஆனால், இன்று வித்தியாசமாக நான் ஊட்டிக்கு வந்து உங்களையெல்லாம் ``சேலத்திற்கு வாருங்கள், இளைஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்ள வாருங்கள். அந்த மாநாட்டை வெற்றிப் பெறச் செய்யுங்கள்" என்று உங்களை எல்லாம் அழைக்க நான் வந்து இருக்கிறேன்.

1967ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சராகப் பொறுப் பேற்று, கலைஞர் அவர்கள் இந்திய ஒன்றியத் திற்கே முதன்முறையாகப் பேருந்துகளை அரசுடைமையாக்கினார்கள். நாட்டுடைமையாக்கினார்கள்.

அப்படி நாட்டுடமை ஆக்கப்பட்டபொழுது அந்த முதல் பேருந்து இயக்கப்பட்டது இந்த நீலகிரி மாவட்டத்தில்தான்.

அப்படிப்பட்ட பெருமை மிகுந்த மாவட்டம் இந்த நீலகிரி மாவட்டம். இந்த நீலகிரி மாவட்டத்திற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் நம்முடைய தலைவர் அவர்களும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் சிலவற்றை மட்டும் இங்கு கோடிட்டு காட்ட நான் விரும்புகின்றேன்.

### உதகையை புதுப் பொலிவாக்கியவர் கலைஞர்!

உதகமண்டலத்தை 1970ஆம் ஆண்டு புதுப் பொழிவுடன் புதுப்பித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோல் உதகையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில், விருந்தினர் மாளிகை கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ததும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்ட போது, அங்கிருந்து திரும்பியவர்கள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். அங்கிருந்து 1970 ஆம் ஆண்டு கூடலூர், பந்தலூர், கோத்தகிரி பகுதிகளில் அவர்கள் குடியிருக்க வீடு கட்டி கொடுத்தவர், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அது மட்டுமல்ல, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தைத் தோற்றுவித்தரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இளம் வணிகர் நலச்சங்க கட்டடத்தை இலவசமாகக் கட்டி தந்த பெருமையைச் சேர்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஊட்டியில் பெரும்பான்மையாக வாழும் படகர் சமூகத்தில் உறுப்பினராக இருக்கக்கூடியவர்களை, பிற்படுத்தப்பட்டோர் பிரிவிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள்.




அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இப்படிப்பட்ட பல பெருமைகளைக் கொண்டது இந்த நீலகிரி மாவட்டம்.

இந்த முறை வருகை தருவது என்னுடைய வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு பயணம், மறக்க முடியாத ஒரு கூட்டம். கழகத்தின் அடிப்படை உறுப்பினராக வந்திருக்கின்றேன், இளைஞர் அணி செயலாளராக வந்திருக்கின்றேன், பல முறை சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் பிரச்சாரத்திற்கு வந்திருக்கின்றேன்.

ஆனால், முதன்முறையாக அமைச்சர் பொறுப் பேற்று உங்களை யெல்லாம் சந்திப்பதற்கு உங்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவதற்கு நான் இன்று வந்திருக்கின்றேன்.

### பிரமாண்டமான அரங்கம்!

இன்னொரு மிகப்பெரிய பெருமை, இந்தக் கூட்டத்திற்கு அண்ணன் முபாரக் சொன்னார்கள். இந்த நீலகிரியில் பல கூட்டங்கள் நடந்தி ருக்கின்றன. ஆனால், முதன்முறையாக ஒரு இயக்கத்திற்காக இப்படி ஒரு பிரம்மாண்டமான அரங்கை அமைத்து, இப்படி ஆயிரக் கணக்கான இளைஞர்களைக் கூட்டி, ஒரு கூட்டம் நடந்தது என்றால், அது இந்தக் கூட்டம்தான் என்று அண்ணன் முபாரக் அவர்கள் சொன்னார்கள்.

அண்ணன் முபாரக் அவர்கள் பேசும்பொழுது, மாநாட்டு நிதியாக ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாக இங்கு அறிவித்திருக்கின்றார். அவர் மட்டுமல்ல, நம்முடைய இளைஞர் அணி அமைப்பாளர் அவர்களும் தனியாக 10 லட்சம் ரூபாய் மாநாட்டு நிதி கொடுத்திருக்கிறார்.

இளைஞர் அணி துணை அமைப்பாளர்களும் சேர்த்து 12 லட்சம் ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு விஷயம் சொன்னார்கள், `இது மிகவும் குறைவான நிதி' என்று. கிடையவே கிடையாது இது சின்ன மாவட்டமாக இருந்தாலும், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய நிதி கிட்டத்தட்ட ஒன்றே கால் கோடி ரூபாய் என்பது மிகப் பெரிய அளவிலான நிதி.

`அன்பகம்', இளைஞர் அணியின் தலைமை அலுவலகம் சென்னையில் அதைத் தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருக்கும் பொழுது அவரும் நம்முடைய தலைவர் அவர்களும் அப்பொழுது இருந்த இளைஞர் அணி செயலாளர்களும் மாவட்டம் மாவட்டமாக வசூல் செய்து அந்த அன்பகத்தைப் பெற்று இன்று இளைஞர் அணிக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். அதற்கும் இந்த நேரத்தில் சேர்த்து நன்றி சொல்ல வேண்டும்.

இளைஞர் அணிக்கு அன்பகம் என்று சென்னையில் ஒரு கம்பீரமான அலுவலகம் இருக்கிறது என்றால், அதற்கு மிக முக்கியமான காரணம் அண்ணன் முபாரக் அவர்க ளும் ஒரு காரணம். அதற்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கழகத்திற்கு உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

கடந்த இரண்டு மாதங்களாக மாநாட்டை அறிவித்துவிட்டுத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொள்ளும் பொழுது இன்னொரு நிகழ்ச்சி நடத்துவோம். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு, கழகத்திற்காக இரத்தம் சிந்திய வியர்வை சிந்திய மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. கிட்டத்தட்ட இதுவரை கழகத்தின் 40 மாவட்டங்களில் 44 கோடி ரூபாய் அளவில் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கும் பொற்கிழி வழங்கியிருக்கின்றோம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் எந்த இயக்கமும் செய்யாததை நம்முடைய தி.மு.கழகம் செய்திருக்கிறது. அது இந்த நீலகிரி மாவட்டத்தில் அண்ணனிடம் நான் வேண்டுகோளாக வைத்திருந்தேன்.

இந்த இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தை முடித்துவிட்டு, மாலை கோயம்புத்தூர் அடுத்த நான்கு நாட்கள் பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கின்றேன். மீண்டும் நான் கண்டிப்பாக வருகின்றேன். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைக் கண்டிப்பாகச் செய்வேன். அதையும் எனக்கு ஞாபகப்படுத்தி இருக்கிறார்.

மாநாட்டை முடித்துவிட்டு, ஜனவரி மாதம் அல்லது பிப்ரவரி மாதம் கண்டிப்பாக மீண்டும், இதே ஊட்டிக்கு வந்து இளைஞர் அணி தம்பிமார்கள் முன்னிலையில், கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியை வழங்குகின்ற நிகழ்ச்சியை நீங்கள் நடத்துவீர்கள். கண்டிப்பாக நான் வருகிறேன். அது என்னுடைய கடமை.

நம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற இருக்கிறது. நாம் இங்கே அதற்காகக் கூடி இருக்கிறோம்.

இந்த இளைஞர் அணிக்கு பல்வேறு பெருமைகள் இருக்கின்றன. இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இளைஞர் அணி உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். நம்முடைய இளைஞர் அணிக்கு என்னென்ன பெருமைகள் இருக்கின்றன, என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் வரலாற்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு இயக்கங்களிலும் அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், நம்முடைய திமுக இளைஞர் அணிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு என்னவென்றால், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்திற்கு 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி என்று ஒன்று துவங்கப் பட்டது என்றால், அது திராவிட முன்னேற்ற கழகம்தான். அதைத் தொடங்கியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

**இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு இயக்கங்களிலும் அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், நம்முடைய தி.மு.க. இளைஞர் அணிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு என்னவென்றால், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்திற்கு 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி என்று ஒன்று துவங்கப்பட்டது என்றால், அது திராவிட முன்னேற்ற கழகம்தான். அதைத் தொடங்கியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**

நம்முடைய திமுக இளைஞரணிக்கு இன்னொரு பெருமை இருக்கிறது. நம்முடைய அண்ணன் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் சொன்னார்கள் இல்லையா, எத்தனையோ அணிகள் இருக்கின்றன. கலைஞர் பலமுறை பாராட்டி இருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள். தி.மு.க.வில் கிட்டத்தட்ட 23 அணிகள் இருக்கின்றன. அந்த 23 அணிகளில் முதன்மை யான அணி எதுவென்றால், அது நம் இளைஞர் அணி என்று கலைஞரும் பாராட்டிருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்களும் பாராட்டி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பெருமையுடைய இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு, முதல் மாநில மாநாட்டின்போது முத்தமிழறிஞர் கலைஞர் தலைவராக இருந்தார்.

நம்முடைய தலைவர் இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள், அப்பொழுது இளைஞர் அணி செயலாளராக இருந்தார். முதல் மாநாடு நெல்லையில் 2007ஆம் ஆண்டு நடைபெற்றது. இப்பொழுது இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற இருக்கின்றது. இது மிகப்பெரிய ஒரு பெருமை.

### தலைவர் கொடுத்திருக்கும் மிகப் பெரிய பொறுப்பு!

பொதுவாக, எல்லோரும் தேர்தல் வருவதற்கு முன், ஒவ்வொரு இயக்கமும் மாநாடு நடத்தும். ஆனால், அந்த இயக்கம்தான் நடக்கும். அணிகளுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கமாட்டார்கள். ஆனால், முதன்முறையாக `2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது, அதற்கு முன்னோட்டமாக ஒரு மிகப்பெரிய மாநாடு நடத்திக் காட்டுங்கள்' என்று நம்முடைய தலைவர் இளைஞர் அணிக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து இருக்கிறார் என்றால், நம்முடைய தலைவர் அவர்கள், என் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை மட்டும் கிடையாது. உங்கள் ஒவ்வொருவர் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கையால்தான் தலைவர் அவர்கள் இந்தப் பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.எனவே, அதை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அதை நிரூபித்துக் காட்ட வேண்டுமென்றால், இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்திற்கு, நான் உங்களை எல்லாம் மாநாட்டுக்கு அழைப்பதற்காக வந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டுதான் வந்தேன். ஆனால், இங்கு வந்த பிறகுதான் உங்களுடைய எழுச்சியைப் பார்க்கும் போதுதான் தெரிகிறது.

என்னைவிட அதிக ஆர்வமாக நீங்கள்தான் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது. எனவே, தலைவர் அவர்களின் நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### ஒட்டுமொத்த தமிழ்நாடே கலைஞர் குடும்பம்தான்!

மோடி அவர்கள் சொல்கிறார், `தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் வாழ்வது, ஒரே ஒரு குடும்பம்தான். அது கலைஞருடைய குடும்பம்தான்' என்று சொல்கிறார். இந்த ஒட்டுமொத்த தமிழ்நாடுமே கலைஞரின் குடும்பம்தான்.

இங்கே இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் கலைஞரின் வாரிசு, கலைஞருடைய பேரன்கள் பெரியாருடைய பேரன்கள், பேரறிஞர் அண்ணாவின் பேரன்கள், ஏதோ கூடி கைதட்டி, பேசி விட்டு கலைகின்ற கூட்டமாக இருக்கக் கூடாது, நம் இயக்கத்தின் கொள்கைகளைப் பேசக்கூடிய இயக்கமாக இருக்க வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் கொள்கை வீரர்களாக இருக்க வேண்டும். இந்தக் கூட்டத்திற்குப் பெயர் செயல் வீரர் கூட்டம். செயல்வீரர் என்று ஏன் பெயர் வைத்திருக்கிறோம்/ செயல் வீரர் என்றால் யார் தலைமை என்ன சொல்கிறதோ தலைவர் என்ன கட்டளை இடுகிறாரோ அதைக் களத்தில் இறங்கி செய்து முடிப்பவன்தான் உண்மை யான செயல் வீரன்.

தன்னலம் பார்க்காமல் சுயநலம் பார்க்காமல் மக்கள் நலன், கழகத்தின் நலன் தலைவர் என்ன சொல்கிறாரோ அது போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ, உண்ணாவிரதமோ என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும், அதைச் சிறப்பாகச் செய்து முடிப்பவன்தான் உண்மையான செயல்வீரன்.

அப்படிப் பார்த்தால், இந்த மாவட்டத்தில் உண்மையான செயல் வீரன் யார் முதல் செயல்வீரன் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் முபாரக், அண்ணனுக்குத் துணை நிற்கும் இன்னொரு செயல் வீரர் யார் என்றால், நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ. ராசா அவர்கள்,

கழகத்திலே இருக்கக்கூடிய முதல் செயல்வீரன், அண்ணன் ராமச்சந்திரன், களத்தில் நிற்கக் கூடிய முதல் செயல்வீரன். இங்கே இருக்கக்கூடிய அமைப்பாளர்கள் அத்தனை பேரும் உண்மையான செயல்வீரர்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த நிகழ்ச்சியில் இவ்வளவு எழுச்சியுடன், உறுதியுடன் கலந்து கொண்டிருக்கிறீர்களே நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையான செயல் வீரர்கள்.

அதனால்தான் இந்தக் கூட்டத்தி ற்குப் பெயர் செயல் வீரர் கூட்டம். இளைஞர் அணி செயலாளராகத் தலைவர் அவர்கள் எனக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தலைவர் அவர்கள் எனக்கு இலக்கு கொடுத்தார்கள். தொகுதிக்கு பத்தாயிரம் பேரை சேர்க்க வேண்டும் நீ என்று. அப்பொழுது மிகப்பெரிய ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டேன். அப்போது, இரண்டாவது கட்டமாகத் தொடங்கிய இடம் என்றால் அது இந்த நீலகிரியில் தான் தொடங்கினேன்.

இப்பொழுது நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் அவருடைய உழைப்பு உங்களுக்குத் தெரியும். தன்னுடைய 14 வயதில் இளைஞர் மன்றம் கோபாலபுரத்தில் தொடங்கினார்.

1967ஆம் ஆண்டு. 1968ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலுக்காக சைக்கிள் பிரச்சாரம் சென்னை முழுவதும் தன்னுடைய 14 வது வயதில் தி.மு.க.விற்காக பிரச்சாரத்தை மேற்கொண்டார், அதேபோல 1969ஆம் ஆண்டு சென்னை மாவட்டத்தின் பிரதிநிதி, 1973ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுக் குழு உறுப்பினர், 1976 ஆம் ஆண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு கடுங்காவல் தண்டனை, 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி ஆரம்பிக்கப்பட்டபோது ஏழு அமைப்பாளர்களில் ஒருவர்.

அதன் பிறகு தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டு கொடியேற்றி, 1989ஆம் ஆண்டில் தி.மு.க.வின் மாநில இளைஞரணி செயலாளர், அதன் பிறகு 2006ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர், 2008ஆம் ஆண்டுக் கழகப் பொருளாளர், 2009ஆம் ஆண்டு துணை முதலமைச்சர், 2016ஆம் ஆண்டு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், 2017ஆம் ஆண்டு கழகத்தின் செயல் தலைவர்,

2018ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பிறகு கழகத்தின் தலைவர், அதன்பிறகு 2021 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

இப்படி தன்னுடைய உழைப்பால் உயர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். யாருடைய காலைப் பிடித்தும் முதலமைச்சர் ஆனவர் கிடையாது. நம்முடைய தலைவர் அவர்கள். நான் யாரை சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.

அப்படிப்பட்ட பெருமையைப் பெற்றது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். நம்முடைய மாநாட்டில் நீங்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு ஒரு வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இன்றைக்கு நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் நம்முடைய மாநாட்டிற்கு வரும் பொழுது நமது இயக்கத்தின் வரலாறு மற்றும் நம் இயக்கத்தின் தலைவர்கள் வரலாறு எல்லாம் உங்களுக்குச் சொல்லப்படும்.

### அடிமைகளை ஓட ஓட விரட்டி அடிப்போம்!

நம்முடைய இந்த மூன்றாண்டு கால ஆட்சி சாதனைகள் உங்களுக்கு விளக்கப்படும். 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எப்படி அடிமைகளை ஓட, ஓட விரட்டி அடித்தோமோ, இப்போது நமக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

2024 ஆம் ஆண்டு அடிமைகளின் எஜமானர்களையும் ஓட, ஓட விரட்டி அடிக்க வேண்டும். அதற்கான துருப்புச் சீட்டு, அதற்கான சாவி உங்கள் கையில் தான் இருக்கின்றது. இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட, சேலம் மாநாட்டில் ஒன்று கூடுவோம்!

எனவே இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் அத்தனை பேரும் நீங்கள் எப்படி இந்த நிகழ்ச்சிக்கு எழுச்சியோடு வந்திருக்கிறார்களோ அதே போலச் சேலம் மாநாட்டிற்கு நீங்கள் வந்து உங்கள் குடும்பத்தோட வந்து உங்கள் நண்பர்களுடன் வந்து ஒரு மிகப்பெரிய எழுச்சி மாநாடாக இதுவரை தமிழ்நாடு வரலாற்றில் இந்திய வரலாற்றில் இப்படி ஒரு சிறப்பான எழுச்சியான மாநாடு நடந்ததில்லை என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நீங்கள் நிரூபித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

எனவே உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி. மீண்டும் உங்கள் அனைவரையும் சேலத்தில் சந்திக்கிறேன். சேலம் மாநாட்டை ஒரு மிகப்பெரிய வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டுவோம் என்று கூறி,

வாய்ப்பளித்த நம்முடைய மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் முபாரக் அவர்களுக்கும், அண்ணன் ஆ.ராசா அவர்களுக்கும், அண்ணன் ராமச்சந்திரன் அவர்களுக்கும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியையும், வாழ்த்து களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

மாற்றுத் திறனாளிகள் வாழ்வு உயர - கலைஞர் வழியில்

# திராவிட மாடல் அரசு தொடர்ந்து பாடுபடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, டிச. 4 -

மாற்றுத் திறனாளிகள் வாழ்வு உயர - நாம் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பாடுபடும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

தன்னம்பிக்கையும் உழைப்பும் கொண்டு சமூகத்தில் சுடர்விட்டு ஒளிரும் மாற்றுத்திறனாளித் தோழர்கள் அனைவருக்கும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாள் வாழ்த்துகள்!

சமூகச் சமத்துவமும் சுயமரியாதையும் போற்றி, உங்களது வாழ்வு உயர நம் கலைஞர் வழியில் உங்கள் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பாடுபடும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பிட்டில் 6 முடிவுற்ற பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி மற்றும் கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆத்தூர் தொகுதியில் உள்ள அனைவரும் பயன்பெறும் வகையில்

# நலத்திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!



திண்டுக்கல், டிச. 4 -

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு பொது மக்களுக்கு தீர்வு வழங்கினார்.

குறிப்பாக ஆத்தூர் தொகுதியை சேர்ந்த பொது மக்கள் அரசு வேலை வாய்ப்பு, இடமாறுதல், பட்டா வழங்க கோரிக்கை விடுத்தல், கிராமங்களில் நாடகமேடை மற்றும் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, உட்பட பல்வேறு கோரிக்கைகளுடன் மனுக்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரிய சாமியிடம் கொடுத்து தீர்வு பெற்றனர்.

ஒருசில மனுக்களை படித்தவுடன் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு அதற்கான தீர்வுகான வேண்டுமென உத்தரவிட்டார். அதன்பின்னர் பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் தமிழகம் முன்னேற்ற பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. ஆத்தூர் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை 100சதவீதம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

கடந்த 3மாதங்களுக்கு முன்பு கூட்டுறவுத்துறையில் உள்ள காலியான இடங்களுக்கு பணிநியமனம ஆணை வழங்கப்பட்டது. படித்த இளைஞர்களுக்கு தகுதியின் அடிப் படையில் ஒரு ரூபாய் செலவின்றி பணிநியமனத்திற்கான ஆணை வழங்கப்பட்டது. தற்போது ஆத்தூர் தொகுதியை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அரசு பணி வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்து வருகின்றனர்.

ஆத்தூர் தொகுதியை பொறுத்தமட்டும் கட்சி, இன பேதமின்றி படித்த இளைஞர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்குவது உறுதி ஒரு பணியிடத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் விண்ணப்பம் செய்திருந்தாலும் தகுதியின் அடிப்படையில் அந்த பணி அவருக்கு வழங்கப்படும் இதில் யாரும் இடையூறு செய்ய முடியாது கூட்டுறவு துறை சார்பாக 115 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பணிநியமண ஆணை வழங்கப்பட்டது. இதுபோல எந்த அரசு பணியாக இருந்தாலும் தகுதியான நபர்களுக்கு அரசு பணி வழங்கப்படும் இது உறுதி என்றார். தற்போது மழைகாலமாக இருப்பதால் ஊராட்சிமன்ற தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தங்கள் பகுதியில் உள்ள நீர் நிலைகளை கண்கானிப்பதோடு மழைநீர் வரும் வரத்து வாய்க்கால்களில் குடியிருப்போரை பாதுகாப்பான இடத்தில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் திண்டுக்கல் நெடுஞ்செழியன், பள்ளபட்டி ஊராட்சிமன்ற தலைவர் பரமன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், மாவட்ட இலக்கியஅணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாயி அணி அமைப்பாளர் இலகண்ணன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன் முருகன், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக துணை செயலாளர் சுமதி கணேசன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் கதிரயன்குளம் பாலன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், திமுக நிர்வாகி நந்தி நடராஜன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார்!

நாமக்கல்,டிச. 4 -

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, சௌரிபாளையம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப்பட்டி ஊராட்சி, 85 ஆர். குமாரபாளையம் ஊராட்சி, சந்திரசேகரபுரம் ஊராட்சி, அக்ராஹாரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள் துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, சௌரிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2021-2022ன் கீழ், ரூ.11.77 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக்கடை, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மையக் கட்டிடம், சந்திரசேகரபுரம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடம், 85.ஆர். கொமாரபாளையம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2022-2023ன் கீழ் ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தொழிற்கூட கட்டிடம், 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2022-2023ன் கீழ், ரூ.10.91 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள வேளாண் விளைப் பொருள் வைப்பு கட்டிடம், மகளிர் சுய உதவிக்குழு கட்டடம்: நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, ராஜபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.70.25 லட்சம் மதிப்பீட்டில் 2,580 ச.அடி பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு கட்டடம் உள்ளிட்டவற்றை இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார். முன்னதாக வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ், ரூ.36.20 லட்சம் மதிப்பீட்டில் போக்குவரத்து வாகனத்தினை இராஜேஸ்குமார் எம்.பி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி யில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர். எம்.துரைசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஏ. ஆர்.துரைசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் க.பா.அருளரசு, மாவட்ட வழங்கல் அலுவலர் த.முத்துராமலிங்கம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், ரஜினி மன்றத்திலிருந்து விலகி வி.ஐ.எஸ்.தமீம் தலைமையில் 50 நபர்கள் திருச்சி மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில், கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இவர்களை சந்தித்து தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் திருச்சி கிழக்கு சட்ட மன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# கனமழை பாதிப்பு தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

சென்னை, டிச.4-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டும், வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தலைமையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து கண்காணிக்கப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்கிம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. பின்னர் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை மாநகரில் பெய்த மழையின் காரணத்தினால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நேரில் வருகை தந்து ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இதன் காரணத்தினால் இரண்டு நாட்கள் பெய்த மழையினால் 138 இடங்களில் மழைநீர் தேங்கி இரண்டு முதல் மூன்று மணி நேரத்தில் மழைநீர் வடிந்து 37 இடங்களில் மட்டும் அதிக அளவில் மழைநீர் தேங்கி தாமதமாக செல்லும் சூழ்நிலையாக இருந்தது இதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் அதிக திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மூலமாக மழைநீர் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது 37 இடங்களிலும் தேங்கிய மழை நீர் அகற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து அலுவலர்களும் தயார் நிலையில் பணிபுரிந்து வருகின்றனர் தேவை ஏற்படின் பொதுமக்களை தங்க வைப்பதற்கு 162 நிவாரண முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்க வைக்கப்படும் பொது மக்களுக் தேவையான உணவு, குடிநீர்,, கழிப்பிட வசதி, மின் வசதி உள்ளிட்ட வசதிகள் தயார் நிலையில் உள்ளன.

மழைநீர் வடிகால் பணிகளைப் பொறுத்தவரை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால் பிரகாசம் சாலை, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, வால் டாக்ஸ் சாலை, ராஜாஜி சாலை, டவுட்டன் சாலை, ஈ.வே.ரா சாலை, போலீஸ் கமிஷனர் சாலை, பேப்பர் மில் சாலை போன்ற பிரதான பகுதிகளில் இப்போது மழைநீர் தேங்கவில்லை. மீதமுள்ள இடங்களிலும் மழைநீர் வடிகால் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, வரும் காலங்களில் வேறு எங்கும் மழைநீர் தேங்காத வண்ணம் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியிள் 23,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மழைக்கால பணியினை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதலாக 2,000 பணியாளர்கள் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

சென்னை மாநகராட்சியை ஒட்டிய பகுதிகளான பெரும்பாக்கம், மேடவாக்கம், கேளம்பாக்கம், ஐயப்பன்தாங்கள், காட்டுப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகள் திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த ஊராட்சி பகுதிகளாகும் இந்த இடங்களில் தேங்கிய மழைநீரினை அகற்றிட ஊராட்சி பகுதி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் மற்றும் கழிநீரகற்று வாரியம் சார்பில் 90 இடங்களில் மோட்டார் பம்புகள், 129 ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன அவசர தேவைகளுக்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது அனைத்து பணிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நேரத்தில் பொது மக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள் பூங்காகள் மற்றும் கடற்கரை பகுதிகளுக்கு கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ள காரணத்தினால் பொது மக்கள் செல்வதை தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாளை மற்றும் நாளைய மறுதினம் மிக கனமழை இருக்கும் என வானிலை ஆய்வு மையத்தால் எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் நோய்த்தொற்று ஏற்படாதவகையில், நாள்தோறும் 35 முதல் 40 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், 318 மருத்துவ அலுவலர்களும், 635 செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களும் தயார் நிலையில் பணிபுரிந்து வருகின்றனர். போதுமான மருந்துகளும் இருப்பில் உள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### திருவொற்றியூர் தொகுதி பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று

# கார்கில் வெற்றி நகரில் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கம்!

## மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை, டிச.4-

கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் கழக மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருவெற்றியூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் - மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் புதிய வழித்தடத்தில் புதிய பேருந்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

திருவெற்றியூர் தொகுதி கார்கில் வெற்றி நகர் பொதுமக்கள் வேண்டுகோளுக்கு இணங்க 56கே பேருந்து பக்கிங்காம் கால்வாய் வழியாக பிராட்வே வரை செல்வதற்கு திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் வேண்டுகோளை ஏற்று மாநகரப் பேருந்து பணிமனை மேலாளர் மற்றும் நிர்வாகிகள் மூலம் மூன்று பேருந்துகள் அந்த வழித்தடத்தில் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக புதிய பேருந்து நிலையம் கார்கில் வெற்றி நகரில் அமைக்கப்பட்டது.

அந்த இடத்தில் கொட்டும் மழையில் புதிய பேருந்தை கொடியசைத்து பேருந்து சேவையை பயணிகளுக்கு இனிப்பு வழங்கி துவக்கி வைத்தார். முன்னதாக பேருந்து நடத்துனர் ஓட்டுனருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அப்போது பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிகழ்வில் கலைஞர் நகர் பாபு, எம்.தயாநிதி, 6-வது வார்டு பொருளாளர் ஜே.ஆர்.டி.சேகர், மேற்கு பகுதி இளைஞரணி மணலி வி.குமார் கார்கில் வெற்றி நகர் தலைவர் பா.கஜா, மேற்கு பகுதி மீனவர் அணி அமைப்பாளர் எஸ்.செல்வம், மேற்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் தமிழ் இன்பன், மணலி வினோத், கார்கில் நகர் சந்திரலேகா, எஸ்.விஜயராகவன், பாலகிருஷ்ணா நகர் துணைச் செயலாளர் கார்கில் வெற்றி நகர் சங்க நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்த நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இளம் தலைமுறையினருக்கு கலைஞரின் பன்முகத்தன்மையினை எடுத்துச் செல்லும் வகையில் முத்தமிழ் தேர் என்ற பெயரில் பேனா வடிவிலான அலங்கார ஊர்த்திக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்சியர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாய அணி செயலாளர் அன்னியூர் ஏ.சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி. என். முருகன், தயா இளந்திரையன், இரா. கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி, நகரச் செயலாளர் இரா. சக்கரை , நகர மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் தயார் நிலையில் மழை முன்னேற்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்!

திருவாரூர்,டிச. 4-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் , மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

அப்போது அமைச்சர் டி ஆர்.பி .ராஜா தெரிவித்ததாவது ,

வடகிழக்கு பருவமழையின்போது இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் மூலமாக வெளியிடப்படும் முன்னெச்சரிக்கை அறிவிப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் கவனமாக பின்பற்றவும். மேலும் அதிக மழை பொழிவு உள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கட்டுப்பாட்டு அறை 24x7 இயங்கக்கூடிய அளவில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக புகார்கள் தெரிவிக்கப்பட்டு, அதன்வழியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

துணை ஆட்சியர் நிலையிலான அனைத்து வட்டாரங்களுக்கும் ஒரு குழு அளவில் ஒன்பது அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் சரக அளவிலும் கோட்ட அளவிலும் 13 வகையான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதிக்கக்கூடிய பகுதிகளாக 176 பகுதிகளில் 41 பகுதிகள் அதிகம் பாதிக்கக் கூடிய பகுதிகளும், 68 பகுதிகள் மிதமான பகுதிகளும், 67 பகுதிகள் குறைவாக பாதிக்கக் கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு அதில் 200 நிவாரண முகாம்கள் அமைக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தீயணைப்பு துறையினரால் திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 152 மாதிரி ஒத்திகை நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு குழு வினரால் இரண்டு நாள் மாதிரி ஒத்திகை பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் மழைக்காலங்களில் வெளியில் வரும் பாம்புகளை பிடிக்க பாம்பு பிடி வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மாவட்டத்தில் அரசின் வழிகாட்டுதலின்படி 4500 முதல் நிலை மீட்பாளர்களுக்கு மூன்று கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதிக்கக்கூடிய 176 பகுதிகளில் அமைந்துள்ள நியாயவிலை கடைகளுக்கு வெள்ளக்கால அத்தியாவசிய பொருட்கள் ஒரு மாதத்திற்கு அனுப்புவதற்காக ஏதுவாக 9499 மெ.டன் அரிசியும், 1254 மெ.டன் சர்க்கரையும், 542 மெ.டன் கோதுமையும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் 14375 மணல் மூட்டைகளும், 94825 சாக்குகளும் மற்றும் 12710 சவுக்கு மரங்களும் தயார் நிலையில் உள்ளது. கால்நடைகளுக்காக 62 நிவாரண மையங்கள் அமைக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிவதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரால் 239பணிகள் எடுக்கப்பட்டு 1099.51 கி.மீ நீளத்திற்கு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு வெள்ளநீர் வடியும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 642 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 163 ஜே.சி.பி இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கபட்டுள்ளது. மீன்வளத்துறை மூலம் 341 படகுகள் தயார் நிலையில் உள்ளது. சுகாதார துறை மற்றும் பொதுசுகாதார துறை மூலம் மழைநீர் தேங்கிய இடங்களில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் ஏற்படா வண்ணம் தடுக்க போதிய தடுப்பூசிகள் கையிருப்பு உள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்திற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத் தால் எடுக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

முன்னதாக, காவல் துறையினரால் பேரிடர் கால முன்னெச்சரிக்கை யினை தடுக்கும் விதமாக இருப்பில் உள்ள மரம் அறுக்கும் கருவி, மோட்டார் படகு, மிதவை ஆடைகள், தீயணைக்கும் கருவி உள்ளிட்ட பொருட்கள் காட்சியப்படுத்திய தனை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மன்னார்குடி நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், திருவாரூர் நகர்மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலைவாணி மோகன், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மும்பை புறநகர் மாநில அமைப்பாளர் அலிசேக் மீரான் தாயார்

# அலிபத்து அம்மையார் இறுதி ஊர்வலம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

ஏர்வாடி டிச.4-

மும்பை புறநகர் மாநில தி.மு.க. அமைப்பாளர் அலிஷேக் மீரான் தாயார் அலி பாத்து அம்மையார் வெள்ளி அன்று இரவு காலமானார்.

சனிக்கிழமை மாலை நல்லடக்கம் நெல்லை மாவட்டம் ஏர்வாடியில் நடைபெற்றது. நல்லடக்கத்தில் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு உட்பட தி.மு.க. பிரமுகர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம் ஏர்வாடியில் மும்பை புறநகர் மாநில அமைப்பாளர் அலி சேக் மீரான் தாயார் அலி பாத்து அம்மையார் வெள்ளிக்கிழமை இரவு 9 மணி அளவில் காலமானார்.அன்னாரின் நல்லடக்கம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் அப்பாவு, மாவட்ட செயலாளர்கள் ஆவுடையப்பன். மைதீன் கான்,சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹ்ஹாப், நெல்லை மாநகர செயலாளர் சுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலை ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், மாநில விவசாய தொழிலாளர் அணி கணேஷ்குமார் ஆதித்தன்,

ஒன்றிய செயலாளர்கள் பி.சி.ராஜன்,செல்வ கருணாநிதி ஜோசப் பெல்சி பொதுக்குழு உறுப்பினர், பரமசிவன் ஐயப்பன் நெல்லை பகுதி செயலாளர், கோபி நெல்லை மாநகர துணை செயலாளர், அப்துல் கையும், மும்பை குமண ராஜன், நங்கை குமன ராஜன்,பிவண்டி முஹம்மது அலி, நகர செயலாளர்கள் களக்காடு மணி சூரியா,கணேசன், அயூப் கான், கசமுத்து நெல்லை மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான், நெல்லை மாவட்டம் முஸ்லிம் லீக் தலைவர் மீரான், ஏர்வாடி திமுக பிரமுகர் அசன் மீரான், நெசவாளர் அணி பீர் முகமது, மாவட்ட பிரதிநிதி கல்வத், மீரா சாகிப், வழக்கறிஞர்கள் அருள் செல்வன், சேவியர் மோசே, சாஜித் ஊர் ஜமாத்தார்கள், வியாபார பிரமுகர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் கடமலை மயிலை வடக்கு ஒன்றியசெயலாளர் தங்கபாண்டியன், ஏற்பாட்டில் கழக மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம். கிராமஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு , சேலைகள் மற்றும் இனிப்புக்கள் வழங்கப்பட்டது. உடன் தெற்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கர்ணன் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராஜாத்தி பால்ச்சாமி, கௌரி, பழனிச்சாமி, சந்திராதங்கம் , தி.மு.க ஒன்றிய துணைச் செயலாளர் சிவக்குமார், செல்வக்குமார், சுதாகர், இளைஞரணி கனகேந்திரன், ஈஸ்வரன், ஊராட்சி செயலாளர் சின்னச்சாமி, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பெருமாள், கண்ணன் வைகைநகர் சுப்பு, உள்பட பலர் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு.
**கே.ஆர்.பெரியகருப்பன்** B.Com.B.L.,
அவர்கள்
கூட்டுறவுத்துறை அமைச்சர்,
சிவகங்கை மாவட்டகழகச் செயலாளர்

மாண்புமிகு.
**மு.தென்னவன்** M.A.,
அவர்கள்
முன்னாள் அமைச்சர்,
மாநில இலக்கிய அணி புரவலர்

**மெ.பழனியப்பன்**
தலைவர்

**பி.ஆர்.முத்து காளிதாஸ்**
துணைத்தலைவர்

**எம்.முருகானந்தம்** B.A.,
அமைப்பாளர்

**வே.பாலசுப்பிரமணியன்**
துணைஅமைப்பாளர்

**எம்.கண்ணன்**
துணைஅமைப்பாளர்

**செலுவத்தி.வே.பிரபு**
துணைஅமைப்பாளர்

**அ.தாமரைக்கண்ணன்**
துணைஅமைப்பாளர்

**க.அய்யங்காளை**
துணைஅமைப்பாளர்

RAMU STUDIOS CELL :8940622633

**மாவட்ட திமுக நெசவாளர் அணி - சிவகங்கை மாவட்டம்**



சமுக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட 56வது ஆரப்பாளையம் பகுதியில் இல்லத்துப் பிள்ளைமார் சங்கம் வைர விழா புட்டு திருக்கண் மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளையல் உள்ளிட்ட சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் , மண்டத்தலைவர் பாண்டிச்செல்வி ஆகியோர் உடன் உள்ளனர்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

இராமநாதபுரம், டிச.4-

இராமநாதபுரம் மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகள் ஆயிரம் பேருக்கு ரூ.1 கோடி பொற்கிழி வழங்கி இளைஞரணி கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தரும் மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் இராமநாதபுரத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இராமநாதபுரத்தில் மாவட்ட அவைத்தலைவர் வ. சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில்,மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். இதில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கழக மூத்த முன்னோடிகள் ஆயிரம் பேருக்கு ஒரு கோடி ரூபாய் பொற்கிழி வழங்கிடவும். டிசம்பர் 17 ஆம் தேதி சேலத்தில் நடைபெற இருக்கும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநாட்டில் இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணியினர் கலந்து கொள்ள அழைப்பு விடுக்க வருகை தரும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பாக வரவேற்பு அளித்திட வேண்டும். சேலத்தில் நடைபெறும் மாநாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் சீறுடை அணிந்து பங்கேற்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்த கூட்டத்தில், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் சுப. தங்கவேலன், எஸ்.சுந்தரராஜன், மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ராஜா, ஏ.என்.இன்பா ரகு, முன்னாள் மாவட்ட செயலாளர் சுப.த. திவாகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகவேல், முத்துராமலிங்கம்,பரமக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கணேசன் அகமது தம்பி மாவட்ட துணைச் செயலாளர் சுஜாதா மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் அறிக்கை!

தேனி, டிச.4-

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (04.12.2023) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தேனி தெய்வா ஹோட்டலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் தலைமை யில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூர் மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. டிசம்பர் 17 ம் தேதி சேலம் மாநகரில் இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள இரண்டாவது மாநில இளைஞரணி மாநாடு குறித்து. 2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

# சிவகங்கை மாவட்டத்தில் 1500 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அறிக்கை

சிவகங்கை, டிச.4-


சிவகங்கை மாவட்டத்தில் இன்று 4ம்தேதி கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கி றார் . கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின்பேரனும்,கழகத்தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் புதல்வருமான கழக இளைஞரணி செயலாளர் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்ற நாள் முதல் சிறப்பாக பணியாற்றி வருகிறார். வருகிற 7ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் மாநில இளைஞர் அணி வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டினை நடத்த உள்ளார்.

இம்மாநாடு குறித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச் சென்று இளைஞரணியினரைநேரில் சந்தித்து வருகிறார் அதன்படி நாளை 4ம்தேதி சிவகங்கை மாவட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். நாளை மாலை இன்று மாலை 4.00, மணிக்கு திருப்பத்தூர் வைரவன் பட்டியில் நடைபெறும் இளைஞரணி செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகிறார். அதை தொடர்ந்து கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டுசிங்கம்புனரி தெற்கு ஒன்றியம் அரளிக்கோட்ட கிளை கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நினைவுக்கம்பத்தில் கழக இருவர்ண கொடியினை ஏற்றுகிறார்.

தொடர்ந்து சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பெருமாள் பட்டியில் கலைஞர் நூற்றாண்டு கொடியினை ஏற்றிவைக்கிறாரா.தொடர்ந்து 1500 கழக மூத்த முன்னோடிகளுக்கு சிவகங்கையில் பொற்கிழி வழங்கும் நிகழ்வில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி கலந்துகொண்டு சிறப்பித்து தந்து கொண்டிருக்கிறார் இன்று திங்கட்கிழமை சிவகங்கை மாவட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் செய்து செய்ய உள்ளார் திண்டுக்கல்லில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு மாலை பகல் 2 மணி அளவில் திருப்பத்தூர் வருகிறது அமைச்சர் அவர்கள் மாலை 4 மணி அளவில் திருப்பத்தூர் அருகே உள்ள வைரவன் பெட்டியில் உள்ள 12 பிரமாண்டமான திடலில் 6000 இளைஞர்கள் பங்கேற்கும் இலங்கையிலுக்கான பயிற்சி பாசறை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

சிவகங்கை நகர் மற்றும் பைபாஸ் சாலையில் 1500 கழக மூத்த முன்னோடிகளுக்கு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார் அதனைத் தொடர்ந்து இரவு 8.00 மணி அளவில் தேவகோட்டையில் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வே.ரூசோவின் சிலைக்கு மாலை அணிவித்தும் அவரது இல்லத்தில் ருசோவின் திருஉருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகிறார்.



இரவு ஒன்பது மணி ராமநாதபுரம் புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளில் கழக இளைஞரணி மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பேரூர்கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்திட வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் அவர்களுக்கு வேஷ்டி சேலை அழகிய ஒரு பையும் வழங்கப் படுகிறது தலைவர் உருவம் டாலரும் வழங்கப்படுகிறது. நான்கு சட்டமன்ற தொகுதியில் இருந்து பங்கேற்கும் 6000 இளைஞர்களுக்கு இளைஞரணி அணி சீருடைகள் வழங்கப்படுகின்றது.


எனவே இந்த நிகழ்ச்சியில் நாளை இந்தியாவில் உருவாக்கும் தலைவரின் நமது முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டுவரும் அவரது வழியில் சிறப்பான முறையில் கட்சிப்பணியின் ஆட்சி பணியாற்றி வரும் நமது அமைச்சர் அவர்களை வரவேற்க வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஏற்பாட்டில் மேலப்பாளையம் வாய்க்கால் பாலம் அருகில் புதிய கழக கொடி கம்பத்தை அமைத்து கழக கொடியை மாநகர செயலாளர் சுப்பிரமணியன் ஏற்றினார். நிகழ்வில் மாநகர நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம்,அன்டன் செல்லத்துரை,இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாயா,இனியன், உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள்,பகுதி கழக,வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



04.12.2023 இன்று
சிவகங்கை சீமைக்கு வருகைதரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்...

சின்னவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக..

மாண்புமிகு
கே.ஆர்.பெரியகருப்பன் B.Com.,BL.,
கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர்

உயர்திரு.
மு.தென்னவன் M.A.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணி புரவலர்

வரவேற்று மகிழும்...

ம.ஜெயராமன் BA.BL.,
ஒன்றிய கழக செயலாளர்

S.மனோகர் சுவாமிநாதன்
மாவட்ட பிரதிநிதி

தங்கம் K.செல்வம்
ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்


R.பாண்டியராஜன்
ஒன்றிய பொருளாளர்

A.S.அழகுசுந்தரம் BE.,
ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்

ஒமேகா திலகவதி கண்ணன் BA.,
மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்

GR.சிலம்பரசன் DME.,
ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்

தெற்கு ஒன்றியம் திமுக - சிவகங்கை




04.12.2023 இன்று
சிவகங்கை சீமைக்கு வருகைதரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்...

மாண்புமிகு
சின்னவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக..

மாண்புமிகு
கே.ஆர்.பெரியகருப்பன் B.Com.,BL.,
கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர்

மு.தென்னவன் M.A.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணி புரவலர்

த.சேங்கைமாறன் B.A.,
சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளர்
சேர்மன், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி

வரவேற்று மகிழும்...

அ.தனசேகரன் B.Com.,Ex.MC.,
மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர்

திமுக தொழிலாளர் அணி - சிவகங்கை மாவட்டம்








மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து நீலகிரி மாவட்டத்தில் நீட்டுக்கு எதிராக பெறப்பட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான கையெழுத்துகளை கொண்ட அஞ்சல் அட்டைகளை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார். இதில் அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு

# 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' பட்டம்!

## திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு சான்று என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச 4-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பாக 2023க்கான'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' என்ற பட்டத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பெற்றிருப்பதை குறித்து ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ந்து பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) சார்பில் 2023க்கான 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' விருது வழக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பது, "இந்த அங்கீகாரம், தமிழகத்தில் விளையாட்டு சாம்பியன்களை உருவாக்கி வளர்ப்பதற்கு நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு சான்றாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முயற்சிகளை அங்கீகரித்ததற்காக இந்திய தொழில் கூட்டமைப்புக்கு (CII) நன்றி தெரிவிக்கிறேன்." என குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் தொழில் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த ஸ்கோர்க் கார்ட் (Scorecard) கருத்தரங்கத்தின் 8வது பதிப்பு டெல்லியில் வருகின்ற டிசம்பர் 4ம் தேதி ஹயாத் ரெஜென்சியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருதை வழங்கவுள்ளார்கள்.

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) என்பது இந்தியாவின் முதன்மையான வணிக கூட்டமைப்பாகவும், இதில் நாடு முழுவதும் 9,000 உறுப்பினர்கள் மற்றும் 300 தேசிய மற்றும் சர்வதேச பெருநிறுவன பங்குதாரர்கள் உள்ளனர். இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) இந்தியாவின் தொழில் மற்றும் வணிக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் அரசுடன் இணைத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் கொள்கை வடிவமைப்பு என பல்வேறு வகையில் இணைத்து செயல்பட்டுவருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது, சமூகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து அனைவரும் பங்கேற்பதை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துகிறது. குறிப்பாக முக்கிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதிலும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், விளையாட்டு வீரர்களின் நலன் காப்பதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு கிடைத்த சான்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




சேலத்தில் 2வது இளைஞர் அணி மாநாட்டினையொட்டி நடைபெற்ற இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி, குமரியில் வள்ளுவர் சிலை முன்பு தொடங்கி சேலம் மாவட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு 27.11.2023 அன்று நிறைவுபெற்றது. அப்மாபோது, நாட்டின் முழக்கங்களை இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ்மாறன், வள்ளுவர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்.கே.கே.கார்த்தி, பி.பிரவின், என்.பால்துரை பெரியார் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் சன் சுரேஸ், எஸ்.எஸ்.எஸ்.செல்வம், பி.டேவிட் அண்ணா மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் கே.குட்டி, டி.ஆர்.ரவீந்திரகுமார், எம்.உத்தமன், கலைஞர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் பர்மா எம்.ரூபன், ஜி.முத்துகுமார், இ.எஸ்.உதயநிதி மற்றும் 188 தி.மு.க. ரைடர்கள் பறைசாற்றினர்.

### ஆட்சியர் ச.உமா தலைமை! கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை!

# நாமக்கல் மாவட்டத்தில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், டிச. 4-

நாமக்கல் நகராட்சி, அரசினர் மேல்நிலைப் பள்ளி (தெற்கு) மற்றும் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நாமக்கல் மாவட்டத்தில் 2023-2024 ஆம் கல்வி ஆண்டில் 5,206 மாணவர்களுக்கும், 5,904 மாணவிகளுக்கு தலா ரூ.4,900/ மதிப்பிலும் என ஆக மொத்தம் ரூ.5.36 கோடி மதிப்பீட்டில் 11,110 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு அரசினர் மேல்நிலைப்பள்ளியில் (தெற்கு) 150 மாணவர்களுக்கும், அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 342 மாணவிகளுக்கும் என 492 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ச.பாலகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர் ஆர்.இரவிசந்திரன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முரசொலி பாசறை
மதுரை 04.12.2023

# திராவிட மாடல் அரசு 45

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**










## ‘மதி’ப்புறும் சமூகம்!

சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் இருக்கிறது, **அன்னை தெரசா மகளிர் வளாகம்.** 1989-ஆம் ஆண்டு முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் **‘மகளிர் சுய உதவிக் குழு’** தொடங்கப்பட்டது. பெண்களின் உழைப்புக்கும் பொருளாதாரத்துக்கும் ஓர் அங்கீகாரத்தைத் தந்தது அந்தத் திட்டம். பிறகு 2010- ஆம் ஆண்டில் அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்விதமாக, ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ அமைக்கப்பட்டது. மாநிலம் முழுக்க உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களை ஒருங்கிணைக்கவும், அந்தக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும், அந்த வளாகம் உதவியது.

இதன் அடுத்தகட்ட பாய்ச்சலாக இருக்கிறது, ‘மதி அனுபவ அங்காடி’. சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் உள்ளிட்டவற்றில் நாம் பல பொருட்களைக் காண மட்டுமே முடியும். அவற்றைத் தொட்டுப் பார்க்கவோ, நுகர்ந்து பார்க்கவோ, சுவைத்துப் பார்க்கவோ இயலாது. வழக்கமாக, நாம் வாங்கும் மளிகை, துணி, வீட்டு அலங்காரப் பொருட்கள்தான் அவை எனினும், அவற்றை நாம் விலை கொடுத்து வாங்கிய பிறகே, அவற்றைத் தொட்டு, உணர முடியும்.

வழக்கமாக நாம் வாங்கிப் பயன்படுத்தும் பொருட்களுக்கே அந்த நிலை என்றால், ‘அடடே... இது புதிதாக இருக்கிறதே. நாம் முயற்சித்துப் பார்க்கலாமே’ என்ற எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தும் புதுமைப் பொருட்களுக்கு, கடைக்காரர்கள் எவ்வளவு கட்டுப்பாடுகள் விதிப்பார்கள்? அந்தக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல், பொருட்களை வாடிக்கையாளர்கள் தொட்டு, உணரும் அனுபவத்தைத் தருபவைதான் ஆங்கிலத்தில் ‘எக்ஸ்பீரியன்ஸ் ஸ்டோர்’ என்று அழைக்கப்படும் அனுபவ அங்காடிகள்.

பொதுவாக, மின் வாகனத் தயாரிப்பு நிறுவனங்களே இதுபோன்ற ‘அனுபவ அங்காடி’களை அமைத்திருப்பார்கள். முதன்முறையாக, அத்தகைய அனுபவ அங்காடியை, சாமானிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு அமைத்திருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’ உருவாக்கியுள்ள ‘மதி அனுபவ அங்காடி’.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், கண்ணாடிகளால் சூழப்பட்டிருக்கிறது அந்த அங்காடி. ‘மகளிர் திட்டம்’ என்பதன் சுருக்கமே ‘மதி’. உள்ளே சென்று பார்த்தால், கண்ணைக் கவரும் கைவினைப் பொருட்கள், ஜவுளி வகைகள், இயற்கை உணவுப் பொருட்கள் இருக்கின்றன. அந்தப் பொருட்களை எல்லாம் நீங்கள் தொட்டு, நுகர்ந்து, சுவைத்துப் பார்க்கலாம். பிடித்திருந்தால், வாங்கிச் செல்லலாம்.

### மலைத்தேன் முதல் மூங்கில் பொருட்கள் வரை

இந்த அனுபவ அங்காடியில் உள்ள சிறப்பு என்னவென்றால், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் இங்கு கிடைக்கும். பட்டு ஜவுளிகள், கைவினைப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், உணவுப் பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்கள் என ஐந்து வகையான பொருட்கள் இங்கு சந்தைப்படுத்தப்படுகின்றன.

ஓர் இடத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தாங்கள் தயாரிக்கும் பொருட்களை மாநிலத்தின் வேறு இடங்களுக்குச் சென்று விற்பனை செய்ய, குடும்பச் சுமைகள், நேரமின்மை, போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வதில் உள்ள நெருக்கடிகள், இடைத்தரகர்கள் எனப் பல விஷயங்களைத் தாண்டி வர வேண்டிய சூழல் முன்பு இருந்தது. அவற்றை களையும் விதமாக, அந்தப் பொருட்களை எல்லாம் தமிழ்நாடு அரசால் கொள்முதல் செய்யப்பட்டு, ஒரே இடத்தில் சந்தைப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் போய் சேர வேண்டிய நியாயமான லாபம் முழுமையாகச் சென்றடைகிறது.

மிக முக்கியமாக, இந்தப் பொருட்கள் எல்லாம் அழகான வடிவமைப்பில் ‘கிஃப்ட் பாக்ஸ்’ ஆகவும் இருக்கின்றன. குறைந்தபட்சம் 300 ரூபாய் முதல் அதிகபட்சம் 2 ஆயிரம் ரூபாய் வரை மதிப்பிலான பொருட்கள் அந்த ‘கிஃப்ட் பாக்ஸ்’களில் இருக்கின்றன.

இன்றெல்லாம், பன்னாட்டு நிறுவனங்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் தங்கள் ஊழியர்களுக்குக் ‘கிஃப்ட் பாக்ஸ்’ கொடுப்பது வழக்கமாக இருக்கிறது. வழக்கமாக வழங்கப்படும் ’கிஃப்ட் பாக்ஸ்’களில் இனிப்பு வகைகள் மட்டுமே இருக்கும். அவ்வாறு இல்லாமல், புதுமையான, ஆரோக்கியமான, வீட்டுக்குப் பயன்படக்கூடிய பொருட்களை வழங்க வேண்டும் என்று விரும்பும் நிறுவனங்கள் இந்த ‘கிஃப்ட் பாக்ஸ்’களை முயன்று பார்க்கலாம். அது தங்கள் ஊழியர்களுக்குப் பயனுள்ளதாக இருப்பதுடன், ஏழை எளிய மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறோம் என்கிற திருப்தியும் கிடைக்கும்.

- வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை ‘மதி அனுபவ அங்காடி’ செயல்படுகிறது.
- ‘ரைட்டர்ஸ் கஃபே’ உடன் இணைந்து, ‘மதி அனுபவ அங்காடி’யில், ஓர் அழகான, சுவையான, தரமான ‘கஃபேடீரியா’வும் இயங்குகிறது.
- ‘மதி அனுபவ அங்காடி’யில் செல்வந்தர் முதல் எளியவர் அவரை அனைவரும் வாங்கக் கூடிய விலைகளில் பொருட்கள் இருப்பது சிறப்பு.
- https://www.mathisandhai.com என்ற இணையதளம் மூலமாகவும் ‘மதி’ பொருட்களை வாங்க முடியும்.
- அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் ஒவ்வொரு மாதம் முதல் மற்றும் மூன்றாவது சனி, ஞாயிறுகளில் இயற்கைச் சந்தை நடத்தப்படுகிறது.

### விரைவில் மாவட்டந்தோறும்...

இப்படியான ஓர் அனுபவ அங்காடி, தற்போது சென்னையில் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 18-ஆம் தேதி திறக்கப்பட்ட இந்த அங்காடிக்கு, சில நாட்களிலேயே மக்களிடம் மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளது. இன்னும் மக்கள் இங்கு வேறு என்னவெல்லாம் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அடுத்த கட்டமாக மாவட்டந்தோறும் ஒரு ‘மதி அனுபவ அங்காடி’யைத் திறக்கும் எண்ணமும் அரசுக்கு உள்ளது.

அதுவரையில், தமிழ்நாடு முழுவதும் 156 தற்காலிக அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும், அந்த மாவட்டத்துக்குரிய சிறப்புப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நமது கழக இளைஞர் அணி செயலாளர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னைச் சந்திக்க வருபவர்கள் பொன்னாடைகள், பூங்கொத்துகள் ஆகியவற்றை அன்பளிப்பாக அளிப்பதற்குப் பதிலாக, மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை வழங்க வேண்டும் என்று அறிவித்திருந்தது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு அளிக்கப்படும் அன்பளிப்புகள் ஆதரவற்றோர், முதியோர் உள்ளிட்ட கருணை இல்லங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் மூலம் மகளிர் சுய உதவிக்குழுவினரின் பொருளாதாரம் உயர்வதுடன், கருணை இல்லங்களில் உள்ள மக்களுக்கும் தரமான, ஆரோக்கியமான பொருட்கள் கிடைத்து, அவர்களும் பயன்பெறுகிறார்கள்.

இப்படி அனைவரையும் அரவணைத்துச் செல்வதுதான் ‘திராவிட மாடல் அரசு’ கொண்டிருக்கும் கொள்கை. அதனால்தான் தமிழ்நாடு ‘மதி’ப்புறும் சமூகமாகவும், ‘மதி’ உள்ள சமூகமாகவும் இருக்கிறது..!

**...சாதனை தொடரும்**

## வெற்றிகளை வேட்டையாடும் ‘ராணி’!

மகளிருக்கு, அரசியல் துறையில் இட ஒதுக்கீடு, சமுதாயத் துறையில் சீர்திருத்தங்கள், பொருளாதாரத் துறையில் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை, திராவிட மாடல் அரசு முன்னெடுத்து வருகிறது.

இதன் மூலம் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில் 43 சதவிகிதம் பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியாவின் உற்பத்தித் துறையில் உள்ள மொத்த பெண் தொழிலாளர்களில் 40 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பல்வேறு ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. உடலுழைப்பை நம்பி செயல்படும் உற்பத்தித் துறை மட்டுமின்றி, விளையாட்டுத் துறையிலும் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைக்கத் தொடங்கியுள்ளனர்.

உலகச் செஸ் கூட்டமைப்பு ஆண்டுதோறும் வழங்கும் ‘கிராண்ட் மாஸ்டர்’ பட்டத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீராங்கனை வைஷாலி வென்றுள்ளார். இதன் மூலம் ‘தமிழ்நாட்டின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர்’ என்ற பட்டத்தையும், பெருமையையும், இந்தியாவில் மூன்றாவது வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

ஏற்கெனவே நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் ‘கிராண்ட் மாஸ்டர்’கள் உள்ள மாநிலம் என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. இப்போது இதில் பெண்களும் இடம் பிடிக்கத் தொடங்கியிருப்பது மாநிலத்தில் செஸ் விளையாட்டின் மீதான ஈடுபாட்டை அதிகரிக்கும்.

## ஃப்ளாஷ்பேக்



முத்துசாமி

### நிதியளிப்பும் திருமணமும்!

1987-ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்துக்கு நிதியளிப்புப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். எளிய கழகத் தொண்டனாகிய எனது இல்லத் திருமண விழா, தலைவர் தலைமையில் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எனது மகன் மு.பழனிசாமி-மருமகள் பி.சாந்தி ஆகியோரது திருமணத்தை, பவானி குமார பாளையத்தில் உள்ள ஜே.கே. கே.சுந்தரம் அவர்களது இல்லத்தில் தலைவர் தலைமையேற்று நடத்தி வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-எம்.என்.முத்துசாமி,
வட்ட அவைத் தலைவர்,
சென்னிமலை பேரூர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண் : 90033- 24473
மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தொலைக்காட்சி இருட்டடிப்பு!

**1989-ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது, ஒன்றிய அரசின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் தமிழ்நாட்டு அரசின் நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்பாமல் இருட்டடிப்புச் செய்வதில் முனைந்து செயல்பட்டன. இந்தப் போக்குக்கு எதிராக, கலைஞர் தலைமையில் பொதுக் கூட்டமும், கூட்டணிக் கட்சிகள் கலந்துகொண்ட மிகப் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடைபெற்றன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 319




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.